www.padippakam.com


# புதிய சமதர்மம்

පුදිය සමධර්මම්

PUTHIYA SAMADHARMAM

இதழ் - 25 | விலை : ரூபா-10.00 | ஜனவரி/பெப்ரவரி 2000 | பக்கங்கள் 12


# சந்திரிகாவின் அபாய அறிவிப்பு

**வடக்கு கிழக்கிலோ தென்னிலங்கையிலோ வதியும் தமிழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வெளிப்படையாகவோ இரகசியமாகவோ ஆதர வளிப்பார்களாயின் அவர்களை கடுமையாக எச்சரிக்கிறேன்; விடுதலைப் புலிகளின் ஆயுள் நெருங்கிவிட்டது. அவர்களின் எண்ணிக்கையும் சிறிது என்றெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க தனது பதவியேற்ற வைபத்தையடுத்து நிகழ்த்திய உரையில் கூறியிருந்தார். அதே நேரத்தில் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு தூண்டிவிடுமாறும், தமிழர்களை அவர் கேட்டுள்ளார். இதனை அவர் இலண்டனில் பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலும் குறிப்பிட்டிருந்தார்.**

1994ல் 62.28% பெரும்பான்மையைப் பெற்று ஜனாதிபதி பதவியேற்ற அம்மையார் தமிழ் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னரைவிடக் கூடுதலான பெரும்பான்மையுடன் மீண்டும் ஒருமுறை மக்களின் ஆணையைப பெற்றுக் கொள்ளப் போவதாகவே ஒரு வருடம் முன்கூட்டி ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதற்கு பிரகடனம் செய்திருந்தார். கிடைத்ததோ 51.12% வெற்றியே. வாக்கு மோசடிகள், வன்செயல்கள். இறுதியில், 18/12/99 இறுதிநாள் பிரசாரக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் குண்டுத்தாக்குதலில் கண்ணில் ஏற்பட்ட காயத்தையும் தொலைக்காட்சியில் மனம் உருக கண்கலங்கி அனுதாப அலையாக மாற்றியே இந்த வெற்றியை அம்மையார் எட்டினார்.

அது ஒருபுறமிருக்க, தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக, முன்பு முன்வைத்ததும் விடுதலைப்புலிகளாலும், ஏன் அரசாங்கத்தை ஆதரிக்கும். தமிழ்க் கட்சிகளால் கூட, ஏற்றுக் கொள்ளப்படாத திட்டத்தினையே சந்திரிகா அம்மையார் தன்கையில் வைத்திருக்கிறார். அதைக்கூட சிங்கள பேரினவாதிகள் கடுமையாக எதிர்த்து நிற்கின்றனர். விடுதலைப் புலிகளை முதலில் ஒழித்துக்கட்ட வேண்டும் என்றே அவர்கள் கங்கணம் கட்டி நிற்கின்றனர். யுத்தமுனையில் அரசாங்கத்திற்கு பின்னடைவுகள் ஏற்பட்ட வண்ணம் உள்ளன. மறுபுறத்தில் அரசியல் தீர்வு முயற்சிக்கு ஐ.தே.க. ஆதரவு வழங்க வேண்டும் என மீண்டும் பழைய பல்லவி தொடங்கிவிட்டது. இதனிடையில் ஐ.தே.க.விலிருந்து பிரிந்து சென்று அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டவர்கள் கூட அம்மையாரின் தீர்வுத்திட்டத்தினை ஆதரிக்கப்போவதில்லையாம். இத்தகைய சூழ்நிலையில் அம்மையாருக்கு திரிசங்கு சொர்க்கம் தான்.

பற்றி எரியும் இப்பிரச்சினைக்கு எந்தவிதத்திலாவது விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என இலங்கைக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் (உலக வங்கி/ சர்வதேச நாணய நிதியம் போன்றவை) வலியுறுத்தி வந்துள்ளன. ஆகையால் இத்தகைய நெருக்குதல்களை சந்திரிகா அம்மையார் தொடர்ந்து புறந்தள்ள முடியாத நிலைதான் உண்டு. இவற்றுக்கும் பேரினவாதிகளின் எதிர்ப்புகளுக்கும் எவ்வாறு முகம் கொடுத்து காரியமாற்றுவது என்ற ''இடியப்பச் சிக்கல்'' நிலையிலேயே சந்திரிகா அம்மையார் காணப்படுகிறார். குழந்தைப் பிள்ளைக்கும் குட்டிநாய்க்கும் இடம் கொடுக்கக் கூடாது என ஒரு நாட்டுப் பழமொழி உண்டல்லவா? பேரினவாதிகளுக்கு விட்டுக் கொடுக்கும் போக்கு நாட்டைக் கெடுக்கும் அரசியலாகும். 1995 ஆவணியில் முன்வைத்த தீர்வுத்திட்டம் இன்று இல்லை. பேரினவாதிகளின் நெருக்குதலால் அது வெட்டிக் கொத்திக் குறைக்கப்பட்டுள்ளது. அதனைக்கூட நிறைவேற்றத் திராணியில்லை. 1958ல் எட்டப்பட்ட பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம். நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்த நாட்டில் இவ்வளவு இரத்த ஆறு ஓடிக் கொண்டிருக்கும் நிலை தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் அன்றும் அரசியல் உறுதியற்ற நிலையில் அம்மையாரின் அப்பனார் பண்டாரநாயக்க அதனை ஒருதலைப் பட்சமாக கிழித்தெறிந்தார். அப்படிச் செய்தும் பேரினவாதிகள் விட்டுவைத்தார்களா? 1959ல் அவரின் உயிரையே குடித்தனர்.

எனவே 'மனதில் உறுதி வேண்டும். வாக்கினிலே இனிமை வேண்டும்' என்று பாரதியார் கூறி வைத்தது போல, ஆட்சி நடத்த முற்படுபவர்களுக்கு அதிஉயர் பண்பாடுகள் வேண்டும். இன்று சந்திரிகா அம்மையார் 80% - 90% சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் ஆதரவிலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1994ல் பின்வாங்கிய பேரினவாதம் இன்று வளர்ச்சியடைந்துள்ள நிலை காணப்படுகிறது. இதனை எதிர்கொள்வதற்கு வலுவான இடதுசாரிச் சக்தியின் தலைமையில் மக்கள் அணிதிரட்டப்படவேண்டும்.

## புலிகளோடு தொலைபேசி தொடர்பு : மனித உரிமைகள் சட்டத்தரணி தீவிர விசாரணை

கல்முனையிலுள்ள பிரபல மனித உரிமைகள் சட்டத்தரணி எம்.கே.பேரின்பராசா விடுதலைப் புலிகளோடு தொலைபேசியில் தொடர்பு கொள்வது தொடர்பாக கொழும்பில் இருந்து சென்ற விசேட பயங்கரவாத தடுப்பு புலனாய்வு பிரிவினரால் விசாரிக்கப்பட்டார். இவரது அலுவலகத்துக்கு வந்த புலனாய்வு பிரிவினர் விடுதலைப்புலிகள் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் சிலரது தொலைபேசி இலக்கங்கள் எமக்கு கிடைத்துள்ளன. அதில் உங்களது தொலைபேசி இலக்கமும் உள்ளது. ஏற்றுக் கொள்கிறீர்களா? என்று கேட்டனராம் .

அதற்கு பேரின்பராசா, தொலைபேசியில் சட்டத்தரணி என்ற முறையில் பலரும் தொடர்பு கொள்வார்கள் யார் யார் தொடர்பு கொள்கிறார்கள் என்று வரையறையாக என்னால் குறிப்பிட முடியாதென்றும் தொலைபேசி மூலம் விடுக்கும் வேண்டுகோள்களில் சட்டத்தரணி என்ற வகையில் செய்யக்கூடியதை நான் செய்து வருகிறேன் என்று பதிலளித்தார்.

இவரை கொழும்பு பயங்கரவாத தடுப்பு புலனாய்வு பிரிவுக்கு வந்து வாக்கு மூலம் அளிக்குமாறு கேட்கப்பட்டதற்கு கொழும்புக்கு வரமுடியாது. விரும்பினால் இங்கு அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

சட்டத்தரணி பேரின்பராசா, பாண்டியிருப்பு சஞ்சீவன் கொலை வழக்கு, கோணேஸ்வரி கொலை வழக்கு உட்பட பல வழக்குகளில் ஆஜராகி வாதாடி வருபவர் என்பது எல்லோரும் அறிந்ததே. இவரின் சேவையானது அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அவலங்களுக்கு துணிச்சலாக வாதாடும். மனித உரிமைகள் சட்டத்தரணிகளுக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களின் நிலை என்ன?

## இஸ்லாமிய மக்களை இழிவுபடுத்தும் வீரவிதான

முஸ்லீம் மக்கள் பன்றிகளுக்கு சமம் இரண்டுக்கும் வேறுபாடு இல்லை என வீரவிதானவின் பெயரில் வெளியிடப்பட்டுள்ள துண்டு பிரசுரமே ஒன்று கூறுகிறது. ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இத்துண்டுப் பிரசுரத்தில் சிங்கள மக்களை விழித்தெழுந்து செயற்படும்படி அறைகூவல் விடுத்துள்ளது. சிங்கள மக்களும், தமிழ் மக்களும் சண்டையிட்டுக் கொண்டு இருப்பதால், இவர்களின் சனத்தொகை குறைந்துவிடும். இதனால், முஸ்லீம்கள் பெரும்பான்மையாக மாறிவிடுவார்கள். படிப்படியாக எஞ்சியுள்ள சிங்களவர்களும் முஸ்லீம்களாக மாறிவிடுவார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள குடும்பங்கள் சிறிதாகவே உள்ளன. இரண்டு மூன்று பிள்ளைகளுடன் நிறுத்திக் கொள்கிறார்கள், பன்றிக்கு சமமான முஸ்லீம்கள் ஏராளமான பிள்ளைகளை பெறுகிறார்கள். எனவே இரண்டுக்கு மேல் பிள்ளைகள் இருப்பின் சனத்தொகை வரி எனும் வரியை அறவிட வேண்டும் எனவும் கோரியுள்ள இப்பிரசுரம் சிங்கள மக்கள் சிங்கள வர்த்தகர்களிடம் மாத்திரமே பொருட்களை வாங்கவேண்டும் என்றும் கோரியுள்ளது.

## சுயநல அரசியலுக்கு சாவு மணி அடிக்கப்பட வேண்டும்

- குசல்தர்ம மகாதேரர்

எமது நாட்டு மக்கள் இலக்கியத்தின் மூலமே நல்ல குணாதிசயங்களை கற்றுக் கொண்டனர். ஆனால் தற்போது நடைமுறையில் உள்ள கல்வித்திட்டத்தில் இலக்கியமே கற்பிக்கப்படுவதில்லை.

முன்னர் எமது நாட்டு மக்கள் நாய், பூனை இறந்தால் கூட கவலைப்பட்டவர்கள். ஆனால் இன்று நூற்றுக்கணக்கில் மனிதர்கள் கொன்று குவிக்கப்பட்டாலும் கவலையடைவதே இல்லை. அவ்வளவு தூரத்திற்கு மக்களின் மனதில் ஈரத்தன்மை வரண்டு போயுள்ளது. மனித நேயம் மறைந்துள்ளது என்று களனி பல்கலைக்கழக உபவேந்தர் வெல்லம்பிடியாவ குசல தர்ம மகா தர்ம நாயக்கதேரர் தெரிவித்தார்,

எமது நாட்டில் சுடர் விட்டெரியும் இனப்பிரச்சினை நெடுங்காலம் தொட்டே இருந்து வருகிறது. நமது அதிகாரங்களுக்கும் சுய நன்மைகளுக்காகவும் செயலாற்றும் சுயநல அரசியலுக்கு சாவு அடிக்கப்பட வேண்டும். புத்த பெருமான் ''நன்றி மறவாதே. ஏனையவர்களுக்குத் தீங்கு நினைக்காதே என்றே'' போதித்தார். ஆனால் நாம் இன்று என்ன செய்து கொண்டிருக்கிறோம் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். உண்மை புரியும்.

படிப்பகம்

www.padippakam.com



# பாராளுமன்ற சுகபோகத்தை விரும்பாத அண்ணாமலை

தோழர் ஆ.க.அண்ணாமலை எம்மைவிட்டு பிரிந்து 11 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அவரின் நினைவுகள் இன்றும் எம் மத்தியில் நீங்காத நினைவாக உள்ளது.

மக்கள் மத்தியில் இடதுசாரி அரசியலை தலைநிமிர்ந்து செய்யக்கூடிய துணிச்சல்மிக்க தலைவர். இடதுசாரி இலட்சியத்திற்காக, தனது உயிரைக்கூட துச்சமாக மதித்து செயல்பட்ட செயல் வீரர், தனக்கு சரியெனப்பட்டதை எவருக்கும் நேராக சொல்லும் துணிவு, இவற்றுடன் ஒரு நல்ல மனிதனுக்குரிய மனித பண்பு இவை அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த மனிதர்தான் தோழர் ஆ.க.அண்ணாமலை.

இன்று தமிழ் மக்களுக்காக போராடுகின்றோம் என்று கூறிக்கொண்டு கொழும்பில் சரணாகதி அடைந்திருக்கும் தமிழ் தலைவர்களைப் பார்க்கும்போது எமது மனம் எவ்வளவு வேதனை அடைகின்றது. இவர்களுள் ஆயுதம் ஏந்தி வீராப்பு பேசியவர்களும் உள்ளனர். வெறுமனே காந்தியவாதத்தை போதித்தவர்களும் உள்ளனர். தமிழ் தலைவர்களின் தற்போதைய நிலையை பார்க்கும்போது தோழர் அண்ணாமலை போன்றவர்கள் எவ்வளவு பெறுமதி உடையவர்கள் என்பது தெரியவருகின்றது.

பண்ணாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட தோழர் அண்ணாமலை தமது இளம்வயதிலேயே தாய், தந்தையரை இழந்தார். இவர்களை இழந்த சொற்ப காலத்துக்குள், தனது சகோதரியையும் இழந்தார். பெற்றோரையும், உடன்பிறப்பையும் இழந்த சோகத்துடனேயே தமது சோசலிச வாழ்வை அண்ணாமலை தொடங்கினார். சமசமாஜ கட்சியின் வாலிப முன்னணியின் முக்கியத்தவராக விளங்கிய இவர் இப்பகுதியில் பல புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொண்டார். குறிப்பாக சாதி ஒடுக்குமுறைக்கெதிராக கடுமையாக போராடியதுடன், முதல் முதலாக சுழிபுரம் பகுதியில் இலவச தனியார் கல்வி நிறுவனத்தை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தார்.

தனது உயர்கல்வியை தொடர்வதற்காக இந்தியா சென்ற தோழர் அண்ணாமலை, அங்கு விஞ்ஞான பட்டதாரியானார். பின்பு லண்டன் சென்று சட்டக்கல்வி பயின்று பரிஸ்ட்டர் பட்டம் பெற்றார். லண்டனில் மிகவும் சுகபோகமாக வாழக்கூடிய சூழ்நிலை இருந்தும் தாய் நாட்டின் மேல் கொண்ட பற்றின் காரணமாக, தாய் நாடு திரும்பினார். இன்று எமது மண்ணில் தோன்றியுள்ள பிரச்சினைகளை காரணமாக வைத்துக் கொண்டு அரசியல் அடைக்கலம் கோர முண்டியடிக்கும் புத்திஜீவிகளுக்குள் அண்ணாமலை மேலானவர் என்றே கூற வேண்டும். தாய் நாட்டில் பிரச்சினை என்றால் ஓடுகின்றவர்கள் போல் அல்லாது தாய் நாட்டுக்காக தனது சுகபோகத்தை துறந்து வந்தவர் அண்ணாமலை.

1977ல் அண்ணாமலை இலங்கைக்குள் வரும்போது, ஜே.ஆர் ஜெயவர்தனவின் கொடுங்கோல் மிகக் கொடிய முறையில் கோலோச்சிய காலமாகும். ஜே.ஆரால் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து இராணுவ அடக்கு முறைகளுக்கு எதிராகவும் தோழர் அண்ணாமலை கடுமையாக போராடினார். இக்காலப் பகுதியில் உருவாக்கப்பட்ட தொழிற்சங்க கூட்டுக்குழு, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பு, வெகுஜன போராட்ட அமைப்பு, என பல்வேறுபட்ட அமைப்புக்களை ஏற்படுத்தி பல போராட்டங்களை முன்னின்று நடத்தினார், துண்டுபிரசார விநியோகம், மறியல் போராட்டங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், அடையாள வேலைநிறுத்தங்கள், ஹர்த்தால் என பல்வேறுபட்ட போராட்டங்கள் வடபகுதி மண்ணில் இக்காலப்பகுதியில் நடந்தேறியது. இதற்காக தோழர் அண்ணாமலை பலமுறை பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.



**தோழர் அண்ணாமலையின் 11வது ஆண்டு நினைவாக...**

தென் இலங்கை அரசியலிலும் தோழர் அண்ணாமலை முக்கிய சக்தியாக விளங்கினார். 1983ல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பழியை ஜே.ஆரின் அரசு இடது சாரிகட்சிகள் மீதே போட்டது. நவசமசமாஜ கட்சிக்கும் தடைவிதித்ததோடு அதன் அரசியல் குழு உறுப்பினர்களை கைது செய்யவும் உத்தரவு பிறப்பித்தது. இவர்களுள் அண்ணாமலை மட்டுமே தமிழ் தலைவராக இருந்தார். பொலிசாரிடம் அகப்படாது தலைமறைவாகவே நவசமசமாஜக் கட்சி அரசியல் குழு அங்கத்தவர்கள் செயற்பட்டனர். இக்காலப் பகுதியில் தோழர் அண்ணாமலை தலைமறைவாகி இந்தியா சென்றார். இந்தியாவில் பல்வேறுபட்ட கட்சிகளினதும் வெகுஜன அமைப்புக்களினதும் தலைவர்களை சந்தித்து இலங்கையில் தமிழ் மக்கள் படும் இன்னல்களை எடுத்துக் கூறினார். இன்று இந்திய அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அவர்களும் தோழர் அண்ணாமலை சந்தித்தவர்களுள் ஒருவராவார்.

தோழர் அண்ணாமலை தான் வாழ்ந்த காலம் முழுவதும் துடிப்பு மிக்க, உணர்ச்சி மிக்க ஒரு புரட்சிவாதியாகவே வாழ்ந்தார். பாராளுமன்ற சுகபோகத்திற்கு அவர் ஒருபோதும் அடிபணியவில்லை. தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் சமுதாய மாற்றத்தை பெரிய அளவில் செய்யலாம் என்ற கற்பனையும் அவரிடம் இருந்ததில்லை. புரட்சிகர வாழ்வையே பெரிதும் விரும்பினார்.

இன்றுள்ள சூழ்நிலையில் தோழர் அண்ணாமலை போன்ற தகுதியான தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இல்லாமல் போனது அவர்களின் துரதிஷ்டமாகும். உலக அரங்கில் பொதுவுடமை வாதம் மீண்டும் புத்துயிர் பெற்றுவருகின்றது. சியேற்றலில் நடைபெற்றுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியே இதற்கு சாட்சியாகும். ருசிய புரட்சிவாதி ஒருவர் கூறியிருந்ததாவது ''எந்த காரணி ருசிய புரட்சியை தோல்வி அடையச் செய்ததோ மீண்டும் அதே காரணி ருசிய புரட்சியை தோற்றுவிக்கும் காரணியாக அமையும்.''

தோழர் அண்ணாமலைக்கு நாம் செய்ய வேண்டியது யாது? அவர் எந்த இலட்சியங்களுக்காக போராடினாரோ அந்த இலட்சியங்கள் நிறைவேறும்வரை தொடர்ந்தும் போராடுவதே அவருக்கு நாம் செய்யும் கைங்காரியமாகும். புத்தாயிரம் ஆண்டில் தோழர் அண்ணாமலை போன்றவர்களின் தியாகங்கள் பெரும் வரவேற்புடன் ஏற்கப்படும்.

நடராசா ஜனகன்
அரசியல் குழு உறுப்பினர்
நவசமசமாஜ கட்சி

## பெரும்பான்மையின அரச அதிகாரிகளால் தமிழ் பாடசாலை காணி அபகரிப்பு

தமிழ் மக்கள் என்றால் அவர்கள் மீது எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் என்பது, இன்று இனவாதிகளின் எண்ணமாகும். பலாங்கொடையில் உள்ள வெலேகும்புற தமிழ் வித்தியாலய காணியே இங்கனம் அபகரிக்கப்பட்டுள்ளது. இதைச் செய்தவர்கள் இரு அரச அதிகாரிகள் ஆவர். இது சம்பந்தமான பொலிசாருக்கு முறையீட்டும் எதுவித பலனும் கிட்டவில்லை.

இது சம்பந்தமாக அரசுடன் ஒட்டியிருக்கும், தமிழ் அரசியல் வாதிகளுக்கு முறையிட்டும் எதுவித பலனும் கிட்டவில்லை என தெரிய வருகிறது.

எனவே தமது நிலையை விவரித்து ஜனாதிபதிக்கு இப்பகுதி தோட்டத் தொழிலாளர் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர். தமிழ் மக்களின் காணிகளில் சிங்கள மக்கள் குடியேறுவதும், அதை தடுப்பதற்கு எதுவித நடவடிக்கைகளையும் பொலிசார் எடுக்காமல் இருப்பதும், இன்று தென் இலங்கையில், குறிப்பாக மலையகத்தில் வழமையாகிவிட்டது.

## களுத்துறை தமிழ்சிறைக்கைதிகள் மீதான தாக்குதல் மிலேச்சத்தனமானது

களுத்துறைச் சிறையில் தமிழ் கைதிகளுக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டு, இருசாராருமாக பலர் காயமடைந்ததுடன், இரு கைதிகள் மரணித்துள்ளனர். காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட கைதிகள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். சில கைதிகளின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இத்தனைக்கும் அரசாங்கத்தின் அசமந்தப் போக்குத்தான் காரணமாகும். இத்தகைய சம்பவங்கள் முன்னரும் கொழும்பு மகசின் சிறையிலும் பின்பு களுத்துறை சிறையிலும் இடம்பெற்றதுடன் சிலர் மரணமடைந்தும் உள்ளனர். தமிழ் கைதிகள் ''விடுதலை செய் அல்லது விசாரணை செய்'' எனும் ஒரே கோரிக்கையை முன் வைத்து பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கொழும்பிலுள்ள அதிகாரிகள் சென்று 1 மாதத்திற்குள் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என உறுதிமொழி . அதன்பின் மீண்டும் விடயம் கிடப்பில் போடப்படும். இரண்டு வருடங்களுக்கு முன் இவ்விடயத்தினை விரைவுபடுத்துவதற்காக நிதியமைச்சில் இருந்து ஒரு பெண் உயர் அதிகாரி கூட நியமிக்கப்பட்டார். பெறுபேறோ பூச்சியம்தான். இந்த நீண்ட கால விடயம் தொடர்பாக நாம் பல தடவைகள் ஜனாதிபதி அம்மையாரினதும் நீதி அமைச்சரினதும் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். சிறைக்கைதிகளும் பல தடவைகள் பத்திரிகை வாயிலாகவும், தாம் சித்திரவதைகளுக்கும், பலரை ஒன்றாக விலங்கிட்டு மிருகங்களைவிட கேவலமாக நடத்துவது போன்ற பல்வேறு அவமானங்களுக்கும் ஆளாக்கப்பட்டு வந்துள்ளதாக தமது வேதனைகளை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், தமிழ் பெண் கைதிகள் சிங்கள பெண் கைதிகளால் தாக்கப்பட்டும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் ஆளாக்கப்பட்டு வந்த சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றை நாம் நிதி அமைச்சுக்கும் மகளிர் விவகார அமைச்சுக்கும் கூட அறிவித்துள்ளோம். எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குதான்.

ஒட்டுமொத்தமாக சிறைக்கைதிகள் விவகாரம் அரசாங்கத்திற்கு ஒரு பாரிய கறைபடிந்த அத்தியாயம் என்றே கூற வேண்டும்.

நீதி, நியாயம், மனிதம் என்ற பெயரில் ஜனாதிபதி அம்மையார் இவ்விடயத்தில் இன்றைய நிலையிலாவது மேலும் தாமதமின்றி நடவடிக்கை எடுப்பதற்கு ஆவண செய்வாரா?

**- நவசமசமாஜக் கட்சி**

## மட்டக்களப்பில் 10,000 பெண்கள் கணவனை இழந்துள்ளனர்

பொது ஸ்தாபனம் ஒன்று எடுத்த மதிப்பீட்டின் பிரசாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 10,000க்கும் அதிகமான பெண்கள் கணவனை இழந்துள்ளதாக அறியப்படுகிறது.

யுத்தத்தின் கோரத்தாலேயே இத்தகைய அவலம் இப்பெண்களுக்கு நேர்ந்துள்ளது. இவர்களில் அனேகமான பெண்கள் 29 வயதுக்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர்.

கஞ்சிக்கு போடும் பயறாக சில நிவாரணங்கள் இப் பெண்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டாலும், இவர்களின் துன்ப சுமையை குறைக்க பெரியளவு புனர்வாழ்வு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றே அறியப்படுகிறது. யுத்தத்தின் மூலமே சமாதானம் என்கின்ற தாரக மந்திரத்துடனேயே பொது ஜன முன்னணி செயற்படுகின்றது. யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள கொடூரமான இழப்புகளில் இதுவும் ஒன்றாக உள்ளது.

www.padippakam.com



**தனது உரிமைக்காக போராடிக் கொண்டு இருக்கும், ஒரு தேசிய இனத்தின் மீது எத்தகைய இராணுவ அழுத்தத்தை பிரயோகத்தாலும், வெற்றி பெற முடியாது, என்பதை வன்னி போர்முனை தெளிவாக புலப்படுத்தியுள்ளது. இதை தென் இலங்கையில் உள்ள சிங்கள பௌத்த இனவாத சக்திகள் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக பலகோடி ரூபா விரையமாக்கப்பட்டு பிடிக்கப்பட்ட வன்னியின் நிலப்பரப்புக்கள் 72 மணித்தியாலத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடம் சென்றுள்ளது.**

**இன்று இலங்கையின் பிரதான கட்சிகளிடம் இனப்பிரச்சினைக்கான யதார்த்தபூர்வமான தீர்வுத்திட்டம் எதுவும் இல்லை. இக்கட்சிகள் கூறுகின்ற தீர்வுகள், நுனிப் புல்லை மேய்ந்த கதையாகவே உள்ளது. தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை இக்கட்சிகள் இன்றும் கூட முன்வைக்கவில்லை. தமிழ் மக்களுக்கான தீர்வோடு மட்டுமல்லாது போரிடுகின்றவர்களுக்கு, உரிய புனர்வாழ்வு, திட்டங்களும் இவர்களிடம் இல்லை. எனவே யுத்தம் இன்று மிகவேகமாக போய் கொண்டிருக்கிறது. யுத்தத்தால் லாபம் அடையும் வர்க்கம் யுத்தத்தை மேலும் விரிவுபடுத்துகிறது.**

# தென் இலங்கையில் வேர்விட்டுள்ள இராணுவ வேலைவாய்ப்பு

இன்று இலங்கையின் வேலை வாய்ப்புத் துறையில் முதலிடம் பெறுவது மத்திய கிழக்கு வேலை வாய்ப்பு துறையாகும். இரண்டாவது இடத்தில் இருப்பது இராணுவத்துறை வேலை வாய்ப்பாகும். பெண்களில் அனேகமானோர் விரும்பும் தொழில் துறை மத்திய கிழக்கு தொழில் துறையாகும். மத்திய கிழக்கில் இலங்கையைச் சேர்ந்த 500,000 பேர் வேலை செய்கின்றார்கள். இவர்கள் மூலம் மாதாந்தம் 30,000 மில்லியன் ரூபா வருமானமாக கிடைக்கின்றது.

இலங்கையில் அதிக வேலை வாய்ப்பை வழங்கும் இரண்டாவது துறையாக இராணுவத்துறை உள்ளதால் இலங்கையில் 2,75,000 பேர் இராணுவத்தில் உள்ளனர். இவர்களது வேதனம், மற்றும் செலவுகளுக்காக 25000 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

நெல் உற்பத்தி மூலம் கிடைக்கின்ற தொகை 26,842 மில்லியன் ரூபா ஆகும். அதேபோல் உபதானிய உற்பத்தி மூலம் 33,126 மில்லியன் ரூபா கிடைக்கின்றது.

ஆனாலும் கிராமிய மக்களுக்கு, தேறிய வருமானமாக மேற்படி உணவுப்பயிர் உற்பத்தியால் 19,989 மில்லியன் ரூபா மட்டுமே கிடைக்கின்றது. சமுர்த்தி உதவித் திட்டத்தில் 796 மில்லியன் ரூபாவும், ஆடைத் தொழிலால் 4,800 மில்லியன் ரூபாவும் கிடைக்கின்றது.

மேற்கூறப்பட்ட துறைகளை பார்க்கின்ற போது இலங்கை கிராமிய மக்களின், முக்கிய வருமானம் வழங்கும் துறையாகவும், அதிக வேலைவாய்ப்பை வழங்குகின்ற துறையாகவும் இராணுவத்துறை உள்ளது.

இலங்கையின் ஏனைய துறைகளில் வேலைவாய்ப்பை பெறுவது மிகவும் கடினமான விடயமாகும். கல்வித் தகமைகளும், அதிகம் தேவைப்படுகின்றன. இராணுவத்தில் சேர்வதற்கோ கல்வியறிவு அதிகம் தேவையில்லை. ஆனால் கல்வியறிவு அதிகம் உள்ள ஒருவர் வேறு துறையில் பெறும் வருமானத்தை விட இராணுவத்தில் உள்ள ஒருவர் பெறும் வருமானம் இரண்டு மடங்கானதாகும். அத்துடன் உணவு, உடை என்பன இலவசமாகக் கிடைக்கின்றன. ஒருவர் இராணுவத்தில் இறந்தால், நஷ்ட ஈட்டு கொடுப்பனவுடன் அவரது மாதாந்த வேதனமும், தொடர்ந்து அவரது குடும்பத்துக்கு வழங்கப்படுகின்றது.

இன்று வருமானத்தை அதிகம் கொடுக்கும் துறையாக இராணுவப் பகுதி இருப்பதால், கிராமிய மக்கள், நிலை சிக்கலானதாக உள்ளது. இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு இராணுவ நடவடிக்கைகள், கட்டுப்பாட்டுக்குள் வருமாயின் கிராமியத் துறையில் வேலை வாய்ப்பு மற்றும் வருமானங்களில் பெரும் தாக்கம் ஏற்படும். இராணுவத்தில் இருப்பவர்களுக்கு ஏனைய துறையில் வேலை செய்வதற்கு நாட்டம் குறைவாகவே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் இராணுவத்தில் உள்ள வருமானம் போன்ற வசதிகள் ஏனைய துறையில் இல்லை என்பதாகும். இன்று இலங்கையில் இருக்கும் முக்கியமான பெரிய கட்சிகளிடம் இனப்பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கும் தாக்கமான கொள்கைககள் எதுவும் இல்லை. இனப்பிரச்சினை தீர்வில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று கடந்த 50 வருடகாலமாக தீர்க்கப்படாமல் இருந்து வரும் இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் திருப்தி கொள்ளும் விதத்தில் தீர்த்து வைத்தல். இரண்டாவது விடயம், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும், இருபகுதியினருக்கும் உரிய மறு வாழ்வுத்திட்டம்.



உண்மையில் இனப்பிரச்சினைக்கே, உரிய திட்டங்கள் எதுவும் இல்லாத நிலையில் பிரதான அரசியல் கட்சிகள் உள்ளன. இத்தகைய ஒரு சூழ்நிலையில் போரில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய மறு வாழ்வுத் திட்டத்துக்கு, இவர்களிடம் என்ன உள்ளது என்பதே பலரதும் கருத்தாகும்.

எனவே முக்கியமான இனப் பிரச்சினையை தீர்க்க வக்கற்ற நிலையில் இலங்கையின் அரசியல் கட்சிகள் உள்ளன. இதேவேளை இந்த நிலைமை தொடர்ந்து நீடித்தால் நாடு இரண்டாவதை தடுக்க எவராலும் முடியாமல் போய் விடும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வை இலங்கை அரசியல் கட்சிகள் கொண்டிருக்கவில்லை என்பது சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடாக உள்ளது. எனவே இலங்கை அரசும் தனது போக்கை தொடர்ந்தால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தனிநாடு பிரகடனம் செய்ய அதிக நாட்கள் செல்லாது.

# பாலியல் வல்லுறவால் வாடும் இலங்கைச் சிறார்கள்

இலங்கையில் சிறார்கள் மீது புரியப்படும் பாலியல் வல்லுறவுகள் மிகவும் கொடுமையானதாக உள்ளது. அண்மைக் காலங்களில் இந்த நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளதாக அறியப்படுகிறது. இதற்கு பல்வேறுபட்ட காரணிகள் அடிப்படையாக இருந்த போதிலும், மேற்கு நாடுகளின் சுற்றுலாப் பயணிகள், திறந்த பொருளாதாரக் கொள்கை என்பன பிரதான காரணிகளாக உள்ளன. பொருளாதார நன்மைக்காக, பல்வேறுபட்ட சுதந்திரங்களை அந்நியர்களுக்கு வழங்கியுள்ள இலங்கை போன்ற ஆசிய நாடுகள், இன்று அதன் விளைவை அனுபவிக்கின்றன. சட்டத்தை அமுல் படுத்த வேண்டியவர்களும், அதைச் சரிவரச் செய்யாமல் ஏனோ தானோ என்ற நிலையில் உள்ளனர். அரசியல் தலையீடுகள் கூட இத்தகைய சம்பவங்கள் கட்டுக்கடங்காமல் போவதற்கு காரணமாகியுள்ளன. எதிர்கால சமுதாயம் கருகும் நிலையில் இன்று இப்பிரச்சனை பூதாகரமாக வெளிப்பட்டுள்ளது. யுத்தம் என்ற விடயம் பெரிதாக இருப்பதால் இத்தகைய விடயங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இங்கினியாகலை என்ற இடத்தில் உள்ள ஏழை விவசாய குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்பிள்ளை தித்தம்புவிற்கு வேலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளார். இப்பிள்ளைக்கு வயது 15. இப் பெண்பிள்ளை இங்கு வர மறுப்பு தெரிவித்த போது, பிள்ளையின் தூரத்து உறவினர், தித்தம்புவவில் ரீ.வி உண்டு. வேறு பல வசதிகள் உண்டு என ஆசை காட்டியுள்ளார். மேற்படி பெண்பிள்ளைக்கு கடுமையான வேலை கொடுக்கப்பட்டுள்ளது. வேலை செய்ய மறுத்தால், மிளகாய்த் தூள் தடவுதல், மெழுகுவர்த்தி உருக்கி உடம்பில் விடுதல் போன்ற கொடுமைகள் இளைக்கப்பட்டு உள்ளது. இறுதியாக வேலை செய்யும் வீட்டுக்காரரின் உறவு முறையுள்ள இளைஞன் மூலம் பாலியல் வல்லுறவு கொடூரமும் இழைக்கப்பட்டுள்ளது. பொலிசுக்கு முறைப்பாடு செய்தால், கொலை செய்யப்படுவாய் என எச்சரிக்கையும் செய்யப்பட்டு உள்ளது. தனது சொந்த ஊருக்கு சென்ற இப்பிள்ளை, பெற்றோருக்கு தனது துயரத்தை வெளியிட்டுள்ளது. தற்போது பொலிஸ் விசாரணை நடைபெறுகிறது.

தமது வீடுகளில் வேலை செய்யும் ஏழைக் குழந்தைகள் மீது பாலியல் விசமங்களை செய்யும் கொடுமை பரம்பரை பரம்பரையாக நடைபெற்று வருகிறது. தற்போது தோன்றியுள்ள அவசர கலாசாரத்தில் சிறுவர்களுக்கு எதிரான கொடுமைகள் விசுவரூபம் எடுத்துள்ளன. உலகரீதியான சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளதால் இங்கும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் இந்நாட்டின் செல்வங்கள். அவர்களைச் சரிவர பாதுகாப்பது ஒரு நாட்டின் அரசின் பிரதான கடமையாகும். அவர்களை நாளைய தலைமுறையினர்க்கு வழிகாட்ட வைக்க வேண்டியது எம் எல்லோரதும் பிரதான பணியாகும். ஆனால் அந்த நிலை இந்த நாட்டில் இல்லை.

குழந்தைகளை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்குவது இன்று உலகம் முழுவதும் நடக்கும் விடயமாகும். இதற்கு வளர்முக நாடுகள், வளர்ச்சி பெற்ற நாடுகள் என்ற பேதம் கிடையாது. திட்டமிடப்பட்ட முறையில் நுணுக்கமாக இந்த கலாச்சார வியாபாரம் நடைபெறுகிறது. அண்மையில் யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தால் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் பல்வேறுபட்ட அதிர்ச்சி தரும் தகவல்களை, பேராசிரியர்கள் வெளியிட்டுள்ளனர். அவர்களின் தகவல்களின் அடிப்படையில் பார்க்கின்ற போது 8 வயது தொடக்கம் 13 வயது வரை, அல்லது 13 வயது தொடக்கம் 18 வயது வரை உள்ள பெண்பிள்ளைகள் பாதுகாப்பு அற்றவர்களாக உள்ளதுடன் பாலியல் ரீதியான அச்சுறுத்தலுக்குள் வாழ்கின்றனர். இவர்கள் அப்பாவிகளாக உள்ளதுடன் இவர்களால் இவற்றை எதிர்த்து போராடக் கூடிய பலமும் இல்லாது இருக்கிறது.

பாடசாலை செல்லும் ஆண்பிள்ளைகள் கூட சொற்ப சந்தோசத்துக்காக பாலியல் வல்லுறுவுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இது சில நாணயங்கள், அல்லது காலை உணவு, மதிய உணவு என்பவற்றுடன் நடத்தப்படுகிறது: இதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பெற்றோர் உற்சாகம் கொடுக்கின்றார்கள். ஏன் என்றால் நிரந்தர வருமானமோ முதலீடோ அவர்களிடம் இல்லாது இருப்பதால் குழந்தைகளின் இந்த துயர நிலைக்கு பல்வேறு காரணிகள் அடிப்படையாக உள்ளன. பெற்றோரால் பிரச்சினை, பொருளாதார நிலை, பாடசாலை செல்லாமை, கலாச்சார மாற்றங்கள், நிச்சயமற்ற எதிர்காலம், கூடாத சேர்க்கை, மரணம் வரும் என்ற பயம், என தொடர்கின்றது. அனேகமாக அடிக்கடி சந்தர்ப்பம் வாய்க்கும் போது, பெண் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். வயது வந்த பெண்கள் கூட தனியாக இருக்கும் போது பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

தற்போது பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரும் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். குறிப்பாக பெண் மாணவர்கள் பல்வேறு தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். போக்குவரத்து துறை உரிய முறையில் மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்யாததால், பெண் மாணவர்கள் நிலை மோசமாக உள்ளது. வடக்கு கிழக்கை பொறுத்தவரை யுத்தம் தொடர்ந்து நடப்பதால், அங்கு படையினரின் பாலியல் துன்புறுத்தல்களே பெருமளவில் உள்ளது.

இத்தகைய கொடூர செயலை மறைப்பதற்காக மேலும் பல கொடூரங்கள் சம்பந்தப்பட்டவர்கள் மீது, புரியப்படுகின்றது. அது சம்பந்தப்பட்டவர்களை கொலை செய்தல், கழுத்தை வெட்டுதல், கிணற்றுக்குள் போடுதல், போன்றவையாகும். இத்தகைய கொடிய செயல்களை புரிபவர்களை, விஞ்ஞான ரீதியான முறைகளைக் கொண்டு கண்டுபிடித்து தண்டிக்கப்பட வேண்டும். மேற்படி குற்றவாளிக்கு நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்கப்பட வேண்டும். இத்தகைய விஞ்ஞானரீதியாக நிறுவப்படக்கூடிய சான்றுகள், நிச்சயம் உண்மையான வயது வந்தோர் மீதும் குழந்தைகள் மீதும் புரியப்படும் குற்றவியல் செயல்களுக்கு எதிரான நிர்வாக நடவடிக்கைக்கு உறுதியாக இருக்கும்.

இலங்கையில் அண்மைக் காலத்தில்தான் இவ்விடயம் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் தோன்றியுள்ளன. மலையகப் பகுதியில் சுற்றுலா விடுதிகள் அமைப்பதற்கு மலையக மக்கள் கடுமையான, எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். இதற்கு முக்கிய காரணம் தமது சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்ற அச்சமே காரணமாகும்.

இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு, எதிராக வலிமையான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஆனாலும் தண்டிக்கப்பட்டவர்கள் பெரிதாக குறிப்பிடுவதற்கு இல்லை. உண்மையில் சிறுவர்களை இந்த அழிவில் இருந்து மீட்க வேண்டுமாயின், முதலில் அவர்களின் வறுமையை போக்க வேண்டும். சிறுவர்கள் மீது குற்றவியல் தீங்குகள் செய்வோர் மீது கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# புத்தாயிரம் ஆண்டில் வலிமை பெறும் இடதுசாரி சக்திகள்

பாராளுமன்ற சுகபோகம் என்ற கொடிய அரக்கனின் கோர பற்களால் தீண்டப்பட்ட இலங்கையின் பாரம்பரிய இடதுசாரி கட்சிகளின் அடையாளமே தெரியாத நிலையில் உள்ளன. தொழிலாளி வர்க்கத்திற்காகவும், ஏழை மக்களுக்காகவும் உழைக்க வேண்டிய அவர்கள், அக்கடமைகளிலிருந்து தவறியதோடு மட்டுமல்லாது, உலக முதலாளித்துவம் உள்ளே வர அனுமதித்தும் உள்ளனர்.

தமிழ் தேசிய இனத்தை பொறுத்தவரையில் இலங்கையின் பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் மீது அறவே வெறுப்புற்ற நிலையில், அல்லது முற்றாக அவற்றை மறந்த நிலையிலேயே உள்ளனர். அவ்வளவு தூரம் வெறுப்புள்ள நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பாரம்பரிய இடது சாரி கட்சிகள் அவ்வளவு தூரம் தமிழ் பேசும் சமூகத்திற்கு வெறுப்பை ஊட்டியுள்ளனர்.

1950களில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து அரசு அமைத்ததுடன் இடதுசாரி கட்சிகளின் வரலாறு அஸ்தமனமாகத் தொடங்கியது. 1970ல் மீண்டும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் அவர்கள் வரலாறு இருளுக்குள் மூழ்கியுள்ளது. 1972ல் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பின் மூலம் தமிழர்களுக்கு இருந்த சிறிய பாதுகாப்பும் கூட இல்லாது செய்த பழியுடனேயே, இவர்கள் வரலாறு முடிவுக்கு வந்தது.

இலங்கையின் பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் ஒழுங்காக தமது பாதையில் சென்றிருப்பார்களேயானால் இன்று இலங்கையின் அரசியல் வரலாறு வேறுவிதமாக அமைந்திருக்கும். தென் இலங்கை இளைஞர்கள் இரண்டு முறை ஆயுதம் ஏந்தியமைக்கும் இன்றுவரை தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலையில் இருப்பதற்கும் இலங்கையின் பாரம்பரிய இடது சாரி கட்சிகள் விட்ட தவறே பிரதான காரணமாகும்.

1977ல் நவசமசமாஜக் கட்சி உதயமாகிய

## நவசமசமாஜ கட்சியின் 22வது ஆண்டு விழாச் செய்தி

போது பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியிலேயே அதன் அரசியல் பயணம் ஆரம்பமாகியது. ஒரு பக்கம் இடதுசாரி கட்சிகள் மீது தொழிலாளி வர்க்கமும், தமிழ் பேசும் மக்களும் கொண்டிருந்த வெறுப்பு நிலை, மறு பக்கம் ஐக்கிய தேசிய கட்சியின் அசுரத்தனமான அடக்குமுறை. இவை யாவற்றிற்கும் முகம் கொடுத்துக்கொண்டு தனது அரசியல் பயணத்தை நவசமசமாஜக் கட்சி ஆரம்பித்தது.

1978ல் ஜே.ஆரின் அரசியல் அமைப்புக்கு எதிராக கறுப்புக்கொடி ஏற்றியமை, 1979ல் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக சவப்பெட்டி ஊர்வலம் செய்தமை, 1981ல் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு மாவட்ட சபை முறை தீர்வாக கொண்டு வரப்பட்ட போது, இது ஒரு மோசடி என்று அறிவித்ததுடன், தமிழ் இளைஞர்களின் அமைப்புகளுடன் இணைந்து பகிஸ்கரிப்பு இயக்கம் நடத்தியமை, இவ்வாறு அன்று தொடக்கம் பலவகை பலமுனைப் போராட்டங்களை நடத்தியதுடன் இன்று வலிகாமம் பகுதி மண் பறிப்புக்கெதிராகவும், வன்னி மக்களுக்கு உணவு அனுப்ப மறுத்தமைக்கெதிராகவும், கண்டியில் வீரவிதான இயக்க நடவடிக்கைகளுக்கு எதிராகவும் போராட்டங்கள் தொடர்கின்றன. நவசமசமாஜிகள் பாராளுமன்ற சுகபோகத்திற்காக தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்கவில்லை. மாறாக தொழிலாளி வர்க்கத்திற்காகவும், தமிழ் தேசிய இனத்திற்காகவும் தொடர்ந்து போராடிவருகின்றனர்.

இடது சாரிகளின் ஐக்கியம் குறித்தே நவசமசமாஜக் கட்சி அன்று தொடக்கம் இன்றுவரை வலியுறுத்தி வருகின்றது. இதற்காக பல்வேறுபட்டமுயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது. தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே என நாடு முழுவதும் பிரசாரம் செய்துவருகிறது. இலங்கையில் அமைதியை கொண்டுவர ஒரு இடதுசாரி அரசாங்கத்தால் மட்டுமே முடியும் என்பதில் அசையாத நம்பிக்கையை நவசமசமாஜக் கட்சி கொண்டுள்ளது.

கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது நவசமசமாஜக் கட்சி முன்னின்று புதிய இடதுசாரி முன்னணியை, ஏனைய இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து ஆரம்பித்தது. இவ் இடதுசாரி முன்னணிக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது. துரதிஷ்டவசமாக புதிய இடதுசாரி முன்னணி தோன்றிய சொற்ப காலத்துக்குள் முறிவடைந்தது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரி சக்திகள் சார்பாக மக்கள் விடுதலை முன்னணி, நவசமசமாஜக் கட்சி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஒன்றிணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தியது. புதிய ஜனநாயக இடதுசாரி முன்னணி சார்பாக தோழர் வாசுதேவ நாணயக்கார போட்டியிட்டார். ஆனால் தேர்தல் முடிவுகள் இடதுசாரிகளுக்கு சார்பாக அமையவில்லை. ஆயினும் பொது இடதுசாரி வேட்பாளருக்குக் கிடைத்த ஆதரவு குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று ரணில் விக்கிரசிங்கா தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பவராக தோற்றம் எடுத்துள்ளார். இது சாத்தான் வேதம் ஓதுவதற்கு சரியாகும். தமிழ் மக்கள் கூட இம் முறை ஐக்கிய தேசியகட்சிக்கு கணிசமான அளவு வாக்குகளை அளித்துள்ளனர். இது இடதுசாரிகள் விட்ட தவறினால் ஏற்பட்ட விளைவாகும். தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வை முன் வைக்காத எந்த இடதுசாரி கட்சியையும், தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

புத்தாயிரம் ஆண்டு ஆரம்பமாக இருக்கும் இவ்வேளையில் இந்த நாட்டின் சகல இடதுசாரி சக்திகளும், ஒன்றுபட வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும். இதுவே நவசமசமாஜக் கட்சியின் 32வது நிறைவு விழா செய்தியாக விடுக்கின்றோம்.

# மேற்குலக நாடுகளின் கொள்கையால் ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தால் பலியாகும் பாலகர்கள்

அண்மையில் கயரைநாட்டு இளம் சிறார்களின் உடல்கள் பிரெசல்ஸ் நகர விமானத்தளத்தில் இருந்த விமானத்தின் அடிப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன. இச்சிறார்களின் உடல்கள் மிகவும் விறைத்த நிலையில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பெல்ஜியத்துக்கும், கயனாவுக்கும் இடையே தினமும் விமான சேவை இருந்து வருகிறது. இந்த சிறார்களின் பெயர்கள் யூகின் கொயிற்றா 14 வயது, போட் ரியூகனா வயது 15, மேற்படி சிறுவர்களின் உடல்கள் அழகிய பெட்டிகளில் வைக்கப்பட்டு, சம்பிரதாய சடங்குகள் நடத்தப்பட்டு, கயனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இக்குழந்தைகள் உயிருடன் பிடிபட்டிருந்தால் எந்தவித இரக்கமும் காட்டாமல், உடனடியாக நாடுகடத்தப்பட்டிருப்பார்கள். மேற்படி நிகழ்வில் உள்ள சோகம் என்னவென்றால், இரு சிறார்களின் உடலில் எழுதப்பட்டிருந்த வாசகங்களே.

அந்த வாசகத்தில்

ஐரோப்பிய நாட்டு உத்தமர்களே, ஐயாமாரே, அங்கத்தவரே, உத்தியோகத்தவரே, ஆபிரிக்க நாட்டில் ஏற்பட்டுள்ள பஞ்சத்துக்கு உதவி செய்யுங்கள். ஆபிரிக்க நாட்டில் நோய்கள், யுத்தம், பஞ்சம் என்பன தலைவிரித்து ஆடுகின்றன. இவற்றை வெளிப்படுத்துவதே எமது மரண யாத்திரையின் இலாக்காகும். பாடசாலைகள் உள்ளன, ஆனால் படிப்பு அங்கு இல்லை. எமது உடல்களை யாரும் கண்டால், ஆபிரிக்க நாட்டில் இருக்கும் நிலையை உணர்ந்து எமது நாட்டுக்கு உதவி செய்யவும். இதை எழுதியமைக்கு எம்மை மன்னியுங்கள்

இக்குழந்தைகளின் செய்தி பெல்ஜியம் நாட்டு அரசாங்கத்துக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தி இருந்தது. பெல்ஜியம் நாடு, ஆபிரிக்க நாடுகளுக்கான உதவிகளை மறுபரிசீலனை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டது. அத்துடன் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் இதுசம்பந்தமாக பெல்ஜியம் செய்தி அனுப்பி உள்ளது.




ஆனாலும் பெல்ஜியம் நாடு, குடிவரவு விடயத்தில் ஏதேனும் விட்டுக் கொடுப்பை செய்யும் நிலையில் இல்லை. மரணம் அடைந்த சிறார்களின் மறைவுக்கு மேற்கு நாடுகளே ஒருவிதத்தில் பொறுப்பாகும்.

தொடர்ச்சியாக, ஆபிரிக்க நாடுகள் மேற்கு நாடுகளால் பல் வேறு வழிகளில் கொள்ளையிடப் பட்டதாலேயே இந்நிலை ஏற்பட்டது. இன்றும் கூட மேற்கு நாடுகளால் பல்வேறு வழிகளில் ஆபிரிக்க நாடுகள் கொள்ளையிடப் படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மக்களைத் தண்டிக்கும் தொடர்பு சாதனங்கள்

இன்று இலங்கையில் உள்ள அனைத்து தொடர்பு சாதனங்களும், தமிழ் மொழியை புறந்தள்ளியே செயற்படுகின்றன. அரச கட்டுப்பாட்டில் உள்ள தொடர்பு சாதனங்களாக இருந்தாலும் சரி, அரச கட்டுப்பாடு இல்லாத தனியார் தொடர்பு சாதனங்களாக இருந்தாலும் சரி இத்தகைய துரோகம் தொடர்ந்து இழைக்கப்படுகிறது.

தொலைக்காட்சி ஊடகமே இன்று, மக்களை தன்னகத்தே கவர்ந்து வைத்து இருக்கிற முக்கிய ஊடகமாகும். இலங்கையில் ரூபவாகினி கூட்டுத்தாபனமும், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனமும், முழுக்க முழுக்க அரச கட்டுப்பாட்டில் இயங்குகின்றன.

இரண்டு நிறுவனங்களும் தமிழ் மொழி நிகழ்ச்சிகளை எவ்வளவு தூரம், ஒதுக்கி வைக்க முடியுமோ, அவ்வளவு தூரம் ஒதுக்கி வைத்தே செயற்படுகின்றன.

தனியார் தொலைக்காட்சி அமைப்புக்கள் சிங்கள, பௌத்த பேரினவாதிகளை திருப்தி செய்யவே செயற்படுகின்றன. தமிழ்மக்களின், தலையில் மிளகாய் அரைக்கும் பிரச்சினையான செய்திகளாய் இருந்தால், முண்டியடித்துக் கொண்டு இந்நிறுவனங்கள் அத்தகைய செய்திகளை ஒளிபரப்புகின்றன. மற்றும் வேளைகளில் மருந்துக்கு கூட தமிழ்மொழி உபயோகம் இல்லை. நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கும் போது, ஒரு தமிழ் செய்தி கூட தனியார் தொலைக்காட்சி பிரிவினரல் ஒளிபரப்பப்படவில்லை. அதேபோல் புத்தாயிரம் ஆண்டு பிறக்கும் போது தமிழ் செய்திகள், நிகழ்ச்சிகள் எதுவும் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தால் ஒளிபரப்பப்படவில்லை. ரூபவாகினி கூட்டுத்தாபனமும் தனது பங்கிற்கு எந்தவித தமிழ் நிகழ்ச்சிகளையும், பெரிய அளவில ஒளிபரப்பவில்லை. நிகழ்ச்சிகளின் போது சில சிங்கள பாடகர்கள் கஷ்டப்பட்டு தமிழ் பாட்டுக்கள் சிலவற்றை பாடியதை பார்க்கக் கூடியதாக இருந்தது.

பொதுவாகவே தமிழ் மொழி உபயோகம் இன்று தென் இலங்கையில் குறைந்து கொண்டே வருகின்றது. தென் இலங்கையில் நடைபெறும் அரச நிகழ்ச்சிகள் பலவற்றில் தமிழ் மொழிக்கு பிரியாவிடை கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் பதவியேற்ற புதிய அமைச்சரவை சத்திய பிரமாண வைபவத்தில் எவரும், தமிழ் மொழியில் சத்திய பிரமாணம் செய்யவில்லை என்பது வெட்ட வெளிச்சமாகி உள்ளது. தமிழில் கவிதை எழுதும், அமைச்சர் கூட தமிழில் சத்திய பிரமாணம் செய்யவில்லை. மலையக வாரிசும் ஆங்கிலத்திலேயே சத்தியப் பிரமாணம் செய்ததாக கூறப்படுகிறது. அரச செலவில் ஒழுங்கு செய்யப்படும் விழாக்களில் கூட தமிழ் மொழிக்கு இடமில்லை. அமைச்சர்களால் திறந்து வைக்கப்படும் பெயர் பலகைகள் கூட தனிச் சிங்களத்திலேயே உள்ளன.

இந்த நாட்டில் அனைவரும் ஒற்றுமையாக இருந்து, பார்த்து மகிழும் கிரிக்கட் விளையாட்டு வர்ணனை கூட அதிகமாகத் தனிச் சிங்களத்திலேயே இடம் பெறுகின்றது.

ஏற்கனவே தமிழ் மக்கள் பல்வேறு வழிகளில் புறத்தள்ளப்பட்டே வருகின்றனர். அரச வேலைவாய்ப்பு, அரசநிதி ஒதுக்கீடு, பிரதேச பாரபட்சம், விளையாட்டுத் துறை சொந்த மண்ணில் இருந்து விரட்டப்பட்ட நிலை, என பல்வேறு நிலைகளில் ஒதுக்கப்பட்டு வருகின்றனர். அம்பாறை மாவட்டம் கோணாகலை சம்பவத்துக்கு பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள மக்களாக இருந்தபடியால் அமைச்சர் அஸ்ரப் உடனடியாகவே நிவாரணம் வழங்கினார். ஆனால், புதுக்குடியிருப்பில் அரச படையால் கொல்லப்பட்ட மக்களுக்கு, எத்தகைய கருணையும் காட்டப்படவில்லை. அண்மையில் வவுனியாவில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு கூட ஓரவஞ்சகம் செய்யப்பட்டது. பெரும்பான்மை இன மக்களுக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் வழங்கப்பட்டன. தமிழ் மக்கள் மரநிழலில், படுத்திருந்தே காலத்தை ஓட்டினர்.

எனவே தமிழ் மக்கள் இன்று சுயநிர்ணயம் கோரி நிற்பதில் எத்தகைய தவறும் இல்லை. பல்வேறு வழிகளில் ஒரு இனம் ஆட்சியாளர்களாலும், அதன் நிர்வாக இயந்திரங்களாலும், துன்புறுத்தப்படும்போது, அந்த இனம் தன் வழியை தான் பார்த்துக் கொள்வதில் தவறு ஏதும் இல்லை. தமிழ் மக்கள் ஒருபோதும் பிரிந்து போக விரும்பவில்லை. மாறாக சிங்கள மக்களுடன் ஒருங்கிணைந்தே வாழ விரும்பினர். ஆனால், தென் இலங்கை சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளே தமிழ் மக்களை பிரதான நீரோட்டத்தில் இருந்து பிரிந்து வந்துள்ளன. அந்த நிலை இன்று அதி உச்ச நிலையை அடைந்துள்ளது என்றே கூற வேண்டும்.

தற்போது தொடர்பு சாதன துறையும், தன் பங்கிற்கு தமிழ் மக்கள் மீது சவாரிவிடத் தொடங்கி உள்ளது. ஆரம்பத்தில் தொடர்பு சாதன துறையினர் இலைமறை காய் ஆகச் செயற்பட்டனர். ஆனால் நாட்கள் போகப் போக தமது சுய உருவத்தை தமிழ் பேசும் நல் உலகிற்கு காட்டத் தொடங்கியுள்ளனர். தொலைக்காட்சி பிரிவில் தமிழ் பிரிவில் கடமைபுரிவோரின் தகுதி திறமை என்பது சந்தேகப்படக் கூடியதாகவே உள்ளது. செய்தி வாசிக்கும் பிரிவில், செயற்படுகின்றவர்களின் உச்சரிப்பைப் பார்க்கும் போது அது மிகவும் தெளிவாக தெரிகின்றது. உள்நாட்டில் தமிழை நன்கு பேசக்கூடிய தமிழ் நிகழ்ச்சிகளை நன்கு கையாளக் கூடிய பல நிபுணத்துவம் வாய்ந்த திறமைசாலிகள் இருந்தும்கூட அதற்கு மதிப்பளிக்காமல், அந்நிய செலவில் இருந்து தமிழ் பிரிவுக்கு சில கலைஞர்கள் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளனர். அவர்களின் ஆடைகள் தான் குறைவாக உள்ளதாக இருப்பதோடு மட்டுமல்லாது, தமிழையும் அலங்கோலமாக உச்சரிக்கின்றனர்.

எனவே நாடு இன்று பற்றி எரிகின்றது என்றே கூறவேண்டும். இந்த நிலை தொடர்ந்தால் அது மேலும் மேலும் சுவாலை விட்டு எரியவே செய்யும்.

# உலக வர்த்தக அமைப்பும் வறுமையில் வாடும் வளர்முக நாடுகளும்

உலக வர்த்தக ஸ்தாபனம் தொடங்கப்படுவதற்கு முன்பாக GATT எனப்படும் (General Agreement of Trades and Trariffs) வர்த்தக, வரி, பொது உடன்படிக்கை இருந்தது. இதை அமைப்பு என்று கூறமுடியாது. பின்பு உருகுவேயில் உலக நாடுகள் சந்தித்து பல சுற்றுக்கள் பேசின. இதன்பின்பே உலக வர்த்தக ஸ்தாபனம் உதயமாகியது. இதனால் வளர்முக நாடுகள் பெரும் துன்பத்தை எதிர் நோக்கின.

அண்மையில் அமெரிக்காவில் சியேற்றல் நகரில் நடைபெற்ற உலக வர்த்தக ஸ்தாபனத்தின், கூட்டம் முடிவுகள் எதுவும் எடுக்காத நிலையில், பெரும் குழப்பத்தில் முடிவடைந்தது. இந்நிலைமைக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) நடத்திய போராட்டங்கள் தான் காரணம் என்று அமெரிக்க சார்பு தொடர் ஸ்தாபனங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. உண்மையில் வளர்முக நாடுகளான மூன்றாம் மண்டல நாடுகள் கொடுத்த அழுத்தமே இம் மாநாடு தோல்வியில் முடிவுற்றதற்கு முக்கிய காரணமாகும்.

வளர்முக நாடுகளின் சீற்றத்துக்கு பல்வேறு காரணிகள் அடிப்படையாக உள்ளன. முதலாவதாக இம் மாநாட்டுக்கு வளர்முக நாடுகள் முழுவதும் அழைக்கப்படவில்லை. இந்தியா, பிறேசில், மலேசியா போன்ற சில நாடுகளே அழைக்கப்பட்டிருந்தன. ஒரு சிறிய அறையில் தாம் விரும்பியவற்றை நிறைவேற்ற முயன்றதாக மேற்குலக நாடுகள் மீது வளர்முக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. அழைக்கப்பட்ட வளர்முக நாடுகள் கூட தரக்குறைவாக நடத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. உலக வர்த்தக ஸ்தாபனத்தின் கொள்கைகள், நோக்கங்கள் என்பவற்றிற்கு எதிர்மாறானதாகவே அவற்றின் தற்போதைய செயற்பாடுகள் இருந்ததாகவும் பேசப்படுகிறது. ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் நடைமுறையில் இருப்பதைப் போன்று ஒவ்வொரு நாடுகளுக்கும் சமமான உரிமை இருக்க வேண்டும் என்ற நிலை முற்றாக புறக்கணிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

இதற்கு முன்பு உருகுவேயில் நடைபெற்ற மாநாட்டிலும், வளர்முக நாடுகள், தரக்குறைவாக நடத்தப்பட்டதாகவே அறிய முடிகிறது. ஆனாலும் வளர்முக நாடுகள் அதை பெரிதுபடுத்தாமல் அம்மாநாட்டில் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது. இம்முறை சகிக்க முடியாத அளவுக்கு அவமதிப்பு நடைபெற்றதாலேயே வளர்முக நாடுகள் கிளர்ந்ததாக சொல்லப்படுகிறது. சியேற்றல் மாநாடு முடிய முன்னரே இரண்டு அணிகள் கொண்ட நாடுகளின் அறிக்கைகள் வெளிவந்தன. லத்தீன், கரீபிய நாடுகள் ஓர் அணியாகவும், ஆபிரிக்க பிராந்திய நாடுகள் ஓர் அணியாகவும் தமது அறிக்கைகளை வெளியிட்டன.

இம்முறை மேற்குல நாடுகளின் தந்திரோபாயம் தோற்றதாகவே பலரும் பேசுகின்றனர். இம் மாநாட்டில் கருத்தொருமிப்பு இருக்கவில்லை, அத்துடன் வெளிப்படையான தன்மையும் காணப்படவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டின எதிர்ப்பு முக்கியமானதாக இருந்தாலும், வளர்முக நாடுகள் வெளியிட்ட அறிக்கைகளே மாநாட்டு தோல்விக்கு உரிய முக்கிய காரணமாகும்.

அமெரிக்காவை பொறுத்தவரை அது இப்பேச்சுவார்த்தையை முற்றாக கொல்லத் தீர்மானிருந்திருந்தது. அமெரிக்காவிடம், இயற்கையாகவே உள்ள திமிர், மற்றவர்களை மதியாமை போன்ற காரணிகள் இதற்கு பக்கபலமாக இருந்தது. அரச சார்பற்ற நிறுவனங்கள் நடத்திய எதிர்ப்பை காரணமாக வைத்து தொழில், சுற்றாடல் தொடர்பாக தடையை அளிக்க கிளின்ரன் முயன்றதாகவும் இதை உலக வர்த்தக முக்கிய பிரமுகர்கள் நிராகரித்ததாகவும் கூறப்படுகிறது.

உலக வர்த்தக ஸ்தாபனத்தின் நடவடிக்கையில் மிகக் குறைவான நிலையில் உள்ள வளர்முக நாடுகள் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்கியதாகவும், குறிப்பாக உலக வர்த்த ஸ்தாபனத்துக்கு முன்னதாக உருகுவேயில் நடைபெற்ற மாநாட்டின் தீர்மானத்தில் இருந்து, இன்றுவரை எத்தகைய வளர்ச்சியையும் இம் வளர்முக நாடுகள் அடையவில்லை என்றே கூறப்படுகிறது. உருகுவே மாநாட்டு தீர்மானம் கூட முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. உலக வர்த்தக ஸ்தாபனம் எடுக்கும் முடிவுகள், நிறைவேற்றுவதில் காலதாமதம், அதிக செலவு இதனால் ஏற்பட்ட உள்நாட்டு சீரழிவுகள் என்பன பெரும் தடையாக இருந்துள்ளது.

உலக வர்த்தகம் 1995ன் பின்பு சுருங்கி வருகின்றது. இதனால் வளர்முக நாடுகள், பெரும் பாதக நிலையில் தத்தளித்தன. உலக வர்த்தக சமமின்மை அதிகரித்து வருகின்றது. ஏற்றுமதி விலைகள், வரிகள் என்பன வளர்முக நாடுகளுக்கு சாதகமாக அமையும் என்றே கூறப்பட்டது. ஆனால் வளர்முக நாடுகளின் நிலை மோசமாக உள்ளது. மூலப் பொருட்களை மட்டும் ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு உலக வர்த்தக ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளால், பெரும் பாதக நிலைமை தோன்றியது. அத்துடன் தனி ஒரு மூலப் பொருளை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு இது மேலும் பிரச்சினைகளை தோற்றுவித்தது. மிகக் குறைந்த பொருளாதார நிலையில் உள்ள வளர்முக நாடுகள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கின. உலக சந்தை தளம்பல் ஏற்படும் போது இந்நாடுகள், தமது பொருளாதாரத்தில் உடனடி மாற்றம் எதுவும் செய்ய முடியாததால் பெரும் சீரழிவுக்கு உள்ளாகின.

உலக மயமாக்கல் கொள்கையால் இன்று உலக நாடுகள் பெரும் குழப்பத்தில் உள்ளன. ''மறைந்த கண்டம்'' என கருதப்படுகின்ற கீழ் சகாராப்பகுதி நாடுகளில், உலக வர்த்தக ஸ்தாபனத்தின் முடிவுகள், பெரிய சீரழிவுகள் ஏற்பட்டது. இந்நாடுகளில் இயற்கை வளம், மனித சக்தி ஆகியன பெரிய அளவில் இருந்தும் பெரிய மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. இது சம்பந்தமாக உலக வர்த்தக ஸ்தாபனம் எதுவித கருத்தும் வெளியிடவில்லை.

வளர்முக நாடுகளின் விவசாயிகள், மேற்குலக நாடுகளின் சில செயற்திட்டங்களால் நன்மையடைப் போகின்றார்கள் என கூறப்பட்டது. அதாவது மேற்குலக விவசாயிகளின் மானியங்களை நிறுத்துவதால், வளர்முக நாடுகளின் பொருட்கள் மேற்குலகத்துக்குள் வரும் என்றும், இதனால் வளர்முக நாடுகளின் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் எனவும் கூறப்பட்டது.

ஆனால், மேற்கு நாடுகள் தமது சந்தையை பாதுகாக்கும், நடவடிக்கையில் ஈடுபடும் போது அது வளர்முக நாடுகளின் பொருட்களுக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தியது. இதனால் ஏற்றுமதி செய்ய முடியாத நிலையிலும், இறக்குமதி செய்ய வசதி இல்லாத நிலையிலும் இன்று வளர்முக நாடுகள் தரிக்கின்றன. 1970ல் வளர்முக நாடுகளின் பொருளாதாரம் தேக்கநிலை, பணவீக்கம் என்ற பிரச்சினைகளையே எதிர்நோக்கியது. ஆனால் ஏற்றுமதி இறக்குமதி வீதம் சாதக நிலையில் இருந்தது. இன்று ஏற்றுமதி இறக்குமதி அற்ற நிலையில் வளர்முக நாடுகளின் பொருளாதாரம் உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளாலும் வளர்முக நாடுகள் பெரும் சோதனையில் உள்ளன.

எனவே இன்று அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும், வளர்முக நாடுகளை வஞ்சிக்கவே முடிவு செய்தன. ஆனால் வளர்முக நாடுகள் ஓரணியில் திரண்டு, தமது எதிர்ப்பை முதன் முறையாக தெரிவித்துள்ளன. எதிர்காலத்தில் மென்மேலும் வளர்முக நாடுகள் ஒன்று சேர்ந்து போராடுவது காலத்தின் அவசியமாகும்.

www.padippakam.com



*இக்கட்டுரை சென்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு ஒரு பகிரங்க கடிதமாக ந.ச.ச.க. அரசியல் குழு உறுப்பினர் வல்லிபுரம் திருநாவுக்கரசுவினால் எழுதப்பட்டது. இதன் ஆங்கிய வாசகமானது 21/11/99ல் வெளியாகிய பிரபல ஆங்கில இதழாகிய ''சண்டே ஐலண்ட்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. 51.12% பெரும்பான்மை வாக்குகளால் 21/12/99ல் இடம்பெற்ற தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே. ஜனாதிபதித் தேர்தல் நீதியானதாக நடைபெறவில்லை என்பது மட்டுமல்லாமல் தேர்தல் பிரசாரத்தின் போது பல்வேறு ஏமாற்றுவித்தைகள் கற்பிக்கப்பட்டன என்பது மட்டுமல்லாமல் மிக மோசமான வாக்கு மோசடிகளும் இடம் பெற்றது மட்டுமல்லாமல், 18/12/99ல் சந்திரிகா மீது இடம் பெற்ற தாக்குதல் காரணமாக சந்திரிகாவுக்கு ஏற்பட்ட அனுதாப அலையும் தேர்தல் முடிவுகளில் கணிசமான செல்வாக்கு செலுத்தியிருந்தது என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும். 1994ல் பெற்ற பெரும்பான்மையைக் காட்டிலும் கூடுதலான ஆதரவினைப் பெற்று பதவிக்கு வந்ததும் 3 மாதத்தில் ''இனத்துவ பிரச்சினை'' தீர்த்து வைக்கப்படும் என சந்திரிகா அம்மையார் அன்று கூறினாரே? நடந்தது என்ன? நடக்கப் போவது என்ன? என்பவற்றை நாம் சொல்லத் தேவையில்லை.*

*-- ஆசிரியர் குழு.*

# யுத்த வெறி கோண்டது சந்திரிகா அரசே

## சந்திரிகாவின் 'இந்து' பேட்டிக்கு திருவின் பதில்

18/10/99ம் திகதி வெளியாகிய இந்து பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உங்கள் பேட்டியின் மை காய முன்பு நீங்கள் ஜனாதிபதி தேர்தல் நடத்த உத்தரவிட்டு இரண்டாவது தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளீர்கள். இதிலிருந்து ஒரு விடயம் வெட்டவெளிச்சமாக தெரிகிறது. அதாவது யுத்தத்தினை மேலும் கொடூரமாக நடத்துவதே உங்கள் நோக்கமாய் உள்ளது. ஏனென்றால் சென்ற ஐ.தே.க. அரசாங்கத்தால் குழப்பி வைத்த யுத்தத்தினை உங்கள் அரசாங்கம் ஐந்து வருடமாக நடத்தியதை ஒரு நீண்டகாலமாகக் கொள்ள முடியாது என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். அது மட்டுமல்லாமல் ஆயுதப்படையினருக்கு நீங்கள் தலைமையையும் தொலை நோக்கையும் வழங்கியுள்ளதாகவும் பெருமையாக கூறியுள்ளீர்கள்.

அடுத்ததாக, விடுதலைப்புலிகள் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்து ''3 மாதங்கள் கழிந்த பின்'' சமாதான யோசனைகளை நீங்கள் முன்வைத்ததாகவும் கூறியுள்ளீர்கள். எனவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவாரார்த்தைகள் நடத்திய 3 மாத காலப்பகுதியில் அவர்கள் முன்னாலோ நாட்டு மக்கள் முன்னாலோ அரசியல் தீர்வுக்கான எந்தவித ஆலோசனைகளும் வைக்கப்படவில்லையென்பது தெளிவாகிறது. பின்பு உங்கள் அரசாங்கம் முன்னைய ஐ.தே.க. ஆட்சியைக் காட்டிலும் கொடூரமாக யுத்தத்தை நடத்தியது தமிழ் மக்களுக்கு வரலாறு காணாத அழிப்புகளையும் அவலங்களையும் ஏற்படுத்தியது. அப்படியிருந்தும் யுத்தம் சமாதானத்துக்கானது. அது விடுதலைப்புலிகளுக்கு மட்டும் எதிரானதேயொழிய தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என பொது ஜன முன்னணி அரசாங்கம் அப்பட்டமாக ஏமாற்று வித்தை கற்பித்தது.

மேலும் தற்சமயம் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை, நீலன் திருச்செல்வத்தின் கொலை மற்றும் கோணகலவில் சிங்கள பொதுமக்கள் படுகொலைகள் போன்ற நிகழ்வுகளுக்குப் பின் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டுள்ள என்றெல்லாம் கூறியுள்ளீர்கள். புதுக்குடியிருப்பில் விமானக் குண்டு வீச்சினால் தமிழ் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதைப் பற்றி நீங்கள் குறிப்பிடவேயில்லை. அது ஒருபுறமிருக்க பரஸ்பரம் படுகொலைகள் பல்லாண்டுகாலமாக சங்கிலித் தொடராக இடம்பெற்று வந்துள்ளன என்பது யாரும் அறிந்த விடயம். எனவே ஆக்கபூர்வமான அரசியல் தீர்வினை கொண்டு வருவதன் மூலம் யுத்தத்துக்கு விரைந்து முற்றுப்புள்ளி வைப்பதற்கு தீவிரமாக பாடுபட வேண்டியது தான் ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்துக்கு வேண்டிய கடப்பாடாகும். அது தான் அர்த்தமுள்ளதாகும்.

### ஐ.தே.க

அதிகம் பேசப்பட்டு வந்துள்ள, மிகவும் உருக்குலைக்கப்பட்டுள்ள, அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்துள்ள தமிழ் கட்சிகளுக்கே ஏற்புடையதல்லாத உங்கள் அரசியல் தீர்வுப் பொதியை நிறைவேற்றுவதற்குத் தேவையான 2/3 பெரும்பான்மையை எட்டுவதற்கு ஐ.தே.க. ஆதரவு அளிக்கவில்லையென நீங்கள் வழக்கம் போல் ஐ.தே.க. வை கடுமையாக விமர்சித்து வந்துள்ளதை யாரும் அறிவர். தற்போது தற்காலிக ஏற்பாட்டில் உள்ளது போல வடக்கு கிழக்கு பலரின ரீதியில் இணைக்கப்பட்டு காணி, பாதுகாப்பு முதலிய விடயங்கள் அடங்கலாக போதிய, பிசகு தடையற்ற அதிகாரங்கள் கொண்ட மாநில சபை அமைக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் கோரிக்கையாகும். இதனை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. பொது ஜன முன்னணி அரசாங்கத்தினால் இந்த எரியும் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்ற நம்பிக்கை அறவே அற்றுப் போயுள்ளதாக வேறுயாருமல்ல ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அண்மையில் கூறியுள்ளார்.

1978 அரசியல் அமைப்பு கேடு கெட்டது, அதன் கீழ் கொண்டுவரப்பட்ட தேர்தல் முறைமை இழிவானது என்றெல்லாம் நீங்கள் மீண்டும் ஒரு முறை அறைந்து விட்டீர்கள். நீங்கள் கூறுவது 100% சரி. அப்படியாக இருக்கும் போது உங்களுடைய அரசாங்கமானது தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தவாறு, பதவியேற்றவுடன் அவ் அரசியலமைப்பினை மாற்றியமைப்பதற்கு ஏதுவாக ஒரு அரசியல் நிர்ணய சபையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஏன் அதே அரசியலமைப்பை பின்பற்றி வந்தது? உங்கள் அரசாங்கம் வேண்டுமென்றே இதற்கு முக்கியமான நடவடிக்கையை மேற்கொள்ளாது தவறி விட்டது. அதற்காக ஆரம்ப காலத்தில் தமிழ் கட்சிகள் அரசாங்கத்திற்கு வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவை பற்றிப்பிடிக்க தவறிவிட்டது. இன்று பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் உங்கள் அரசாங்கத்தை ஆதரிக்கின்றன என நீங்கள் கூறுவது மிக தப்பானதாகும்.

நீங்கள் ஐ.தே.க. வையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் விமர்சிப்பது ஒன்று. ஆனால் அந்த பல்லவியையே அல்லும் பகலும் பாடித்திரிவது இன்னொன்று. அதுவும் அரசாங்கத்தின் கையாலாகத்தனத்தையும் உறுதியற்ற போக்கினையும் மூடி மறைப்பதற்கான வேலையாக அது அப்பட்டமாக தெரிகிறது.

நீங்கள் கூறியுள்ளது போலவே அதிகப் பெரும்பான்மையான சிங்கள மக்களும் அதேபோல் தமிழ் மக்களும், அரசியல் தீர்வையே விரும்புகிறார்கள் என்பது தெட்டத் தெளிவானதாகும். அதன் காரணமாகவே மிகவும் அறிவார்ந்த பரந்துபட்ட பொதுமக்கள் 1994ல் உங்களுக்கு பிரமாண்டமானதொரு அதிகாரத்தை வழங்கினர். 80% முதல் 90% வரையான தமிழ் மக்களும் உங்களை ஆதரித்தனர். தமிழ் மக்கள் நிச்சயமாக வேறு எவரையும் விட கூடுதலாக சமாதானத்தை விரும்புகின்றனர் என்பது தெரிந்ததே. அவர்கள் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை காண விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் காணவிரும்புவது சமத்துவத்துடன் கௌரவத்துடன் கூடிய சமாதானமேயன்றி அதற்கு குறைந்தது எதுவுமல்ல. அதனையே எந்தவொரு சுதந்திரமான பிரசையும் விரும்புவாரல்லவா? அவர்கள் இதனை சட்டமாக்குங்கள் என உங்களிடம் வேண்டுகின்றனர் என நீங்கள் கூறுகிறீர்கள். அதிலே ''இதனை'' என்பது அரசாங்கத்தால் முதலில் முன்வைக்கப்பட்டு இன்று உருக்குலைக்கப்பட்ட நிலையில் இருக்கும் தீர்வும் பொதியையே குறிப்பிடுகிறீர்கள். இதற்கும் உண்மைக்கும் எதுவித தொடர்பும் இல்லை. இதனை அவர்கள் விழுங்கி விடுமளவுக்கு அப்பிராணிகள் என நீங்கள் அவர்களை நினைப்பது தான் நகைப்பிற்குரியதாகும். இதனை அவர்களின் தொண்டைக்குழிக்குள் தள்ளி விட முடியாது. தமிழர்கள் வெறுமனே சிறுபான்மையினர் என்பதை மறந்து, அவர்கள் இறைமையையும் அதிகாரத்தையும் பகிர்ந்து கொள்ள உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதை மனங்கொள்வது தான் நாட்டுக்கே நன்மை பயக்கும். 'இனத்துவ பிரச்சினை'க்கு தீர்வு காண்பதற்கு வேறு எந்தவொறு தலைவரைக் காட்டிலும் கூடுதலான தூரம் சென்றுள்ளதாகவும் சிங்கள மக்கள் அதனை ஏற்கச் செய்வதிலும் நீங்கள் வெற்றி கண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள். இங்கே சொல்லாமல் சொல்லப்படுவது யாதெனில், தமிழரின் (அதேபோல் முஸ்லிம்கள் மற்றும் பிரிவினரதும்) தலைவிதியை ஒரு சிங்கள பௌத்த தலைவரே நிர்ணயிக்க முடியும் என்பது ஒன்று. ஏனென்றால் வேறு இன/மத தலைவர் எவரொருவரும் இலங்கையில் ஜனாதிபதியாக இருக்கவே முடியாது. அடுத்ததாக ''அவ் அப்பாவிகளுக்கு'' வழங்கும் ''சன்மானங்கள்'' சிங்கள பௌத்த பெரும்பான்மையினரால் ஆமோதிக்கப்பட வேண்டும்! சன்மானங்களை அவர்கள் மூச்சுக்காட்டாமல் விழுங்கிவிட வேண்டியதுதான். பின்பு அவர்களின் உரிமை என கொள்ளப்பட வேண்டிய அபிலாசைகளை குப்பைத் தொட்டியில் இட வேண்டியது தான்! ஜனாதிபதி அம்மையாரே, இந்த பழைய் சிங்கள பௌத்த பேரினவாத போக்குத் தான் இறுதியில் பிரபாகரன்களையே உருவாக்கியது. ஏனென்றால் தமிழ் மக்களின் தேசிய உரிமைகளை வென்றெடுப்பதற்காக முந்திய பல தசாப்தங்களாக பொன்னம்பலம், செல்வநாயகம், சுந்தரலிங்கம், நவரத்தினம், நல்லையா, அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் எல்லா அரசாங்கங்களுக்கும் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்கியும் வேறு பல வழிவகைகளை கையாண்டும் கண்ட பலன் ஒன்றுமேயில்லை. நீங்கள் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகள் ''சிறுபான்மை மக்களைத் திருப்திப்படுத்தியுள்ளதாக கூறியுள்ளீர்கள்.

ஜனாதிபதி அம்மையாரே, இரத்த ஆறோ தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. ஓடியது போதுமெனப் போதும், அத்தோடு நாட்டின் பொருளாதாரம் தேய்பிறையாகிச் செல்கிறது இப்போது நீங்கள் ஒரு வருடம் முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தல் நடத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள். 1994ல் பெற்ற அதிகப் பெரும்பான்மை பலத்தைக் காட்டிலும் கூடுதலான பெரும்பான்மை பெறும் நம்பிக்கையுடன், 'இனத்துவ பிரச்சினையை' ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டு 3 மாத காலத்தில் தீர்த்துவிடப் போவதாக நீங்கள் கூறியுள்ளீர்கள். இது ஒரு முயற்கொம்பு தான் என்பதில் சந்தேகமில்லை. 1994ல் உங்களுக்கு கிடைத்த மக்கள் பலம் பாழடிக்கப்பட்டதால் மக்கள் வேதனைப்படுகின்றனர். ஒரு புறத்தில் ஐ.தே.க. வை கடுமையாக ஓயாது சாடிய வண்ணம் 2/3 பெரும்பான்மையை பெற்று கொள்வதற்காக அக்கட்சியின் ஆதரவையும் எதிர்பார்க்கின்றீர்கள். மறுபுறத்தில் ஐ.தே.கவோ ஜே.வி.பியோ நாட்டையோ மக்களையோ நேசிப்பதில்லையென்று அனுராதபுர புனித பூமியில் நடைபெற்ற உங்களது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூறியுள்ள நீங்கள் 'இனத்துவ பிரச்சினையை' தீர்ப்பதற்கு அவ்விரு கட்சிகளின் ஆதரவையும் கோரியுள்ளீர்கள்.

நீங்கள் இத்துணை சிக்கலான பிரச்சினையின் ஆழ நீளத்தினை இன்னும்தான் சரியாக இனம் கண்டுகொள்ளவில்லை என்பதையே இது கோடிட்டுக் காட்டுகின்றது. இது காலங்கடந்தது. அற்ப சொற்பமானது. ஏற்பதற்கு யாருமில்லை இது தான் தேசிய இனப்பிரச்சினையின் நீண்ட கால வரலாற்றில் காணப்பட்ட பீத்தலாகும்.

## அறம் பிழைத்த அரியணை

*நான்கு சுவர்களுக்குள்*
*நாங்கள் இருக்கிறோம் - எமது*
*வாழ்வை எண்ணியிங்கே*
*தினமும் அழுகிறோம்*

*எமக்கொரு நீதி சொல்ல*
*யாரும் இல்லையே என்*
*இறைவா! நீ, கூட யிங்கு*
*உதவி இல்லையே!*

*புத்தனது நாடு என்று*
*புனிதம் பேசுவார் - சிலர்*
*செத்துப் போ! தமிழாவென்று*
*தினமும் ஏசுவார்*

*கருணையுள்ள கூட்ட மென்று*
*கதைகள் கட்டுவார்- இவர்*
*கம்பிகளால் எமக்கடித்து*
*நெருப்பை கொட்டுவார்*

*வளைந்து விட்ட செங்கோலை*
*நிமிர்த்த வாருங்கள் - சிறையுள்*
*வாடுகின்ற எங்களுக்கு*
*வாழ்வு தாருங்கள்*

- முத்து மாதவன்

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய காம்ரேட்கள் !

இந்திய சுவர்களில் ''நோட்டீஸ் ஒட்டாதே'க்கு அடுத்தபடியாக அதிகமாகக் காணப்படுவது பல்வேறு கம்யூனிஸ்ட் இயக்கத்தினரின் அறிக்கைகளும் அறைகூவல்களும்தான். ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டைலும் ஒவ்வொரு விதம். பூர்ஷ்வா, ஏகாதிபத்தியம், திரிபுவாதி, நவீனதிரிபுவாதி, போலி ஜனநாயகம், வர்க்க எதிரி புரட்டல்வாதம் போன்ற சிக்கலான வார்த்தைகளில் சலிக்காமல் அந்த வாசகங்கள் பல வருடங்களாகப் புரட்சிக்காக போராடிக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் தங்களை ''நக்சலைட் இயக்கம்' என்று அழைத்துக் கொள்ளும் குழுக்கள் நூற்றுக்கும் மேல் இருக்கின்றன. அதில் மக்கள் செல்வாக்கோடு தொழிற்சங்கம், பேரணி என்று அமைப்பு ரீதியாக ஓரளவு கூட்டம் திரட்ட முடிகிற குழுக்களின் எண்ணிக்கை இருபதுக்குள்தான் இருக்கும். அதில் ஓரளவு மக்களிடம் செல்வாக்கோடு இருப்பவை மூன்று இயக்கங்கள்தான்.

1. மக்கள் யுத்தக் குழு (PWG) .
2. மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் (செங்கொடி)
3. மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் (விடுதலைக் குழு)

'எதற்கெடுத்தாலும் பிளவுபடுவது மட்டுமே' கட்சியின் முக்கியக் கோட்பாடு என்பது போல் இயங்கிவரும் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவில் காலடி எடுத்த வைத்த ஆண்டு 1920.

ஆரம்பத்திலேயே இந்திய கம்யூனிஸ்டுகளிடையே குழப்பமும், பிரிவுகளும் இருந்ததைத் தொடர்ந்து, 'உங்களுக்குள்ள அடிச்சிக்காதீங்கப்பா, இப்படியே போனீங்கன்னா நாங்க உங்களை கம்யூனிஸ்டாவே அங்கீகரிக்க மாட்டோம்.....' என்று ரஷ்யா, சீனாவிலிருந்து அட்வைஸ் வந்ததும் ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட்கள் கொண்ட ''இந்தியப் பொதுவுடமை கட்சி (CPI) உருவாகியது. அதிசயமாக சுமார் இருபது வருடங்கள் ஒற்றுமையாக நீடித்த இந்தக் கட்சியிலிருந்து சி.பி.ஐ. (எம்) பிரிந்தது. குருசேவ் திரிபுவாதி, சீன எல்லைத் தகராறு விஷயத்தில் தங்களைக் காட்டிக் கொடுத்தவர்கள் காங்கிரஸின் வாலாக மாறிவிட்டார்கள் என்று சி.பி.ஐ. மீது குற்றும் சாட்டிவிட்டு சி.பி.எம். பிளவுபட்டது. சி.பி.ஐ. செய்த அதே தவறுகளை சி.பி.எம்.மும் சிறிது காலம் கழித்து செய்தது. லெனினால் பன்றித் தொழுவம் என்று அழைக்கப்பட்ட பாராளுமன்றப் பாதையில் சி.பி.எம்.



செல்ல ஆரம்பித்து விட்டது என்று குற்றம் சாட்டி சி.பி.எம்.மிலிருந்து மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் இயக்கம் பிரிந்தது.


'வர்க்க எதிரியின் ரத்தத்தில் கை நனைக்காதவன் கம்யூனிஸ்ட்டே அல்ல' 'கட்சி ஆயுதப் போராட்டத்துக்கட்சி' போன்ற அறிவிப்புகளோடு 1969ல் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் என்ற நக்சல் பாரி இயக்கம் பிரிய, இதனுடைய கோஷத்தைப் பிரபலமாக (ஸ்பிரிங் தண்டர்) வசந்தத்தின் இடிமுழக்கம் என்றார்கள்.

சாரு மஜீம்தாரை பொதுச் செயலாளராகக் கொண்டு மேற்கு வங்கத்தில் புறப்பட்ட இந்த இயக்கம் இந்தியா முழுக்க பல மாநிலங்களில் வேகமாகப் பரவியது. 'Annihilation' என்று அவர்களால் சொல்லப்படும் அழித்தொழிப்பதை நக்சல் இயக்கத்தின் தா ரக மந்திரமாக்கினார் சாரு மஜீம்தார். கெரில்லாப்போர் முறையில் நிலப்பிரபுக்கள் கொல்லப்பட்டு அவர்களது நிலங்கள் கைப்பற்றப்பட்டன. சீனப் புரட்சியின் ஸ்டைலில் புறப்பட்ட இந்த நடவடிக்கைகள் நாடெங்கும் பல இளைஞர்களை ஈர்த்தன.

மேற்கு வங்காளம் டார்ஜிலிங் மாவட்டத்திலுள்ள சிலிகுரி வட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறிய கிராமத்தின் பெயர் நக்சல்பாரி. தீவிர நக்சல் இயக்கம் இங்குள்ள விவசாயிகளைத் திரட்டி நிலப்பிரபுக்களைக் கொன்று தனது முதல் 'அறுவடையை' இங்கே தான் துவக்கியது. ஒரு காரணப் பெயராக இதற்குப் பின்னர் நடந்த இது மாதிரியான செயல்களுக்கு நக்சல்பாரி என்ற பெயரிடப்பட்டு அதனை செய்தவர்கள் நக்சலைட்டுகளாகி விட்டனர்.



மேற்கு வங்காளத்தில் தொடங்கி நாட்டின் பல மாநிலங்களுக்குப் பரவிய நக்சல்பாரி இயக்கம் என்ற புயல் ஆந்திராவில் சற்று அதிக வலுவோடு மையம் கொண்டது. ஆந்திர மாநிலத்தின் ஸ்ரீகாக்குளம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நக்சல்பாரிகள் தலைமையில்



ஒன்று திரண்டு ஏராளமான நிலப்பிரபுக்களையும் அவர்களுக்கு பாதுகாப்பளிக்க வந்த பொலீசாரையும் கொன்று குவித்து நிலங்களைக் கைப்பற்றி தங்கள் வசப்படுத்தினர். உயிர் தப்பிய மற்றவர்கள் தங்கள் ஊரைக் காலி செய்து ஓட, ஸ்ரீகாக்குளம் சம்பவங்கள் நாடெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

நக்சல்பாரி இயக்கத்தின் நடவடிக்கைகள், '72 ஜுலை 28 -ல் சாருமஜீம் தார் கல்கத்தாவிலுள்ள ஒரு காவல் நிலையத்தில்மரணமடைந்ததைத் தொடர்ந்து பல வீனமடைந்தது. அதுவரை ஒரே அணியில் இயங்கி வந்த நக்சல் இயக்கம் பல மாநிலக் குழுக்களாக உடைந்தது. அவர்களும் ஒருவருக்கொருவர் கடும் எதிரிகள் ஆனார்கள்.

புரட்சியை அழித்தொழிப்பு என்ற ஒரே வடிவத்தில் தான் செய்ய முடியும் என்று ஒரு குழுவும், வெகு ஜனமார்க்கத்தில் தான் செய்ய முடியும் என்று மற்றொன்றும் இல்லை கூட்டு வழியில் செய்யலாம் என்று இன்னொரு பிரிவினரும் கருத்து வேறுபட்டு நாடெங்கிலும் நக்சல்பாரிகள் பல குழுக்களாக சிதறுண்டு போனார்கள்.

எந்த அழித்தொழிப்பு மூலமாக நக்சல்பாரிகள் ஜனங்கள் கவனத்தை ஈர்த்தார்களோ, அதே அழித்தொழிப்பு இவர்களை அந்நியப்படுத்த ஆரம்பித்தது. மக்கள் இவர்களை நெருங்கி வரப் பயந்தார்கள். 'நக்ஸலைட்' என்கிற வார்த்தைக்கு மக்கள் பயப்பட ஆரம்பித்தார்கள்.

இதன் பின்னர் 80 களில் பீஹாரிலுள்ள போஜ்பூரில் வினோத் மிஸ்ரா தலைமையில் நக்சல்பாரி இயக்கம் வேறொரு வடிவத்துடன் எழுந்தது. திரண்ட ஆயுதப் போராட்டம் பாதையை கைவிட்டு விட்டு அரசியல் அணித்திரட்டலுக்காக பாராளுமன்றத்தையும் பயன்படுத்த வேண்டும் என்ற முடிவில் மிஸ்ரா தலைமையில் திரண்ட இக்குழு எம்.எல். இயக்கத்தில் அடுத்த கட்டத்துக்குச் சென்றது.

இந்த நூற்றாண்டின் இறுதிவரை கம்யூனிஸ்ட் இயக்கங்களில், 'எந்தப் பாதை வழி செல்வது?' 'காங்கிரஸை ஆதரிக்கலாமா, வேண்டாமா?' 'தேர்தலில் பங்கெடுக்கலாமா கூடாதா?' என்ற ரீதியில் மண்டையைப் பிளக்கும் விவாதங்கள் இடைவிடாது நடந்து கொண்டிருந்தாலும் சி.பி.ஐ. சி.பி.எம்.மினர் மற்ற கட்சியினர் போல் தேர்தலுக்கு தேர்தல் பல பல்டிகள் அடிப்பதும், சந்தர்ப்பவாத கூட்டணிகளை அமைத்துக் கொள்வதுமாக இருக்க 'புரட்சி' யின் சாத்தியம் மெல்ல பிசுபிசுக்க ஆரம்பித்தது.

கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மத்தியிலும் வரை துடிப்பாக இருந்த கம்யூனிஸ இயக்கம் கடந்த பல வருடங்களில் (முக்கியமாக சோவியத் சிதைவுக்குப் பிறகு) தடுமாறிப் போனதற்கு என்ன காரணம்?

''கடந்து வந்த பாதை சரியோ தவறோ, ஆனால் இந்த சகாப்தத்தின் மாபெரும் தத்துவம் கம்யூனிஸம் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது'' என்றார் நக்சல்பாரி இயக்கம் என்று சொல்லக்கூடிய மார்க்சிய - லெனனிய கட்சியின் செங்கொடி இயக்கத்தின் தமிழக பொதுச் செயலாளரும், 27 வருடங்களாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரும், எல்ஜியெஸ் என்று இயக்கத்தினரால் அழைக்கப்படுபவருமான இல. கோவிந்தசாமி. கம்யூனிஸ இயக்கம் பற்றி பாரபட்சமற்ற விமர்சனம் செய்பவர் இவர்.

''இத்தனை வருஷங்களா இயக்கத்துல இருந்தவன்ங்கிற முறையில் இயக்கம் வளராததுக்கு மூன்று விதமான நோய்கள் தான் காரணம்னு நினைக்கிறேன். ஒரு புரட்சி இயக்கத்தை நடத்த அறிவு, ஆற்றல், அர்ப்பணிப்பு இந்த மூன்றும் வேணும். அர்ப்பணிப்புங்கிற விஷயத்துல நக்சல் பாரிகளை மிஞ்ச ஆளே கிடையாது. இந்திய சரித்திரத்துல மக்கள் நலனுக்காக ஐயாயிரத்துலிருந்து ஆறாயிரம் ஊழியர்கள் வரைக்கும் உயிர்ப்பலி தந்த ஒரே இயக்கம் எம்.எல். இயக்கம்தான். ஆனால் பிரச்சினை இது மட்டும் இல்லை. அறிவு, ஆற்றல் சம்பந்தப்பட்டதுலதான் பிரசினையே.



முதல் நோய் நவக்கிரகப் போக்கு. இந்தக் குழுக்கள் கிட்ட ஆரோக்கியமா விவாதிக்கிற குணமே இல்லை. ஒன்றுக்கொன்று பார்க்காத, பேசாத நவக்கிரகங்கள் மாதிரி இருப்பாங்க. ஆனா எல்லா இயக்கங்களுமே நாங்க மட்டும்தான் புரட்சி செய்ய வந்தோம்பாங்க.

இரண்டாவது நோய் யதுகுல மனப்பான்மை. மகாபாரதத்துல கிருஷ்ணருடைய யாதவர் குலம் ஒருத்தரை ஒருத்தர் அடிச்சிட்டு சாகிற மாதிரி இங்கே கம்யூனிஸ்ட்டுகள் ஒருத்தரை ஒருத்தர் அவதூறு, கொலை பண்ணிக்கிறாங்க, எதிரியைப் பார்த்து நம்ம கம்யூனிஸ்டுங்க அடிக்கிற முதல் கமெண்ட். 'நீ ஒரு சி.ஐ.ஏ.ஏஜெண்ட்' என்பதுதான்.

மூணாவது பரமபத விளையாட்டு வைகுந்தம் போறதுக்கான இந்த விளையாட்டுல ஏணியில ஏறி பாம்புல இறங்குவோம். கம்யூனிஸ்டுகளுக்கு புரட்சிதான் வைகுந்தம். இங்க உள்ள கம்யூனிஸ்ட்டுங்க புரட்சி நடத்துறேன்னு சொல்லிட்டு ஏணியில ஏறி பாம்புல எறங்கிறாங்க. எல்லா கம்யூனிஸ்டுகளுமே புரட்சியபத்திப் பேசுறாங்களே ஒழிய இவங்களுக்குள்ள ஒற்றுமை சுத்தமா இல்லை. மேலும் மேலும் பிளவுதான் இங்க உள்ள இயக்கங்கள், நடக்குது.

ரெண்டு கம்யூனிஸ்டுங்க ஒரு எடத்துல சந்திச்சா, தோழர் ஒருத்தர், புரட்சியை அடைய ரஷ்ய வழிதான் சிறந்தது'ம்பார். உடனே அடுத்தவர் 'இல்ல தோழர் சீன வழிதான் சிறந்தது'ம்பார். உடனே பிளவுபட ஆரம்பிச்சிடுவாங்க. இப்படி புரட்சி பத்தி பேசுறவங்களப்பத்தி நாங்களே கிண்டலா.

''அன்பே'ன்னு கூப்பிட பொண்டாட்டி இல்லாதப்ப, பிறக்கப் போற புள்ளைக்கு பேரு தேன்மொழியா? செம்மறவனான்னு அடிச்சிக்கிறாங்கன்னு'' சொல்வோம்.

இந்த ஒற்றுமையின்மை போக, இயக்கம் வளராததுக்கு இன்னொரு முக்கிய காரணம், இங்கே கட்சியில சேர்ந்தவுடனே தனிநபர் மன அமைதி பறி போகுது. சொல்லப் போனா, நானே கூட மன அமைதி இல்லாமதான் இத்தனை வருஷமா இயக்கத்துல இருந்துக்கிட்டிருக்கேன். ஆனா கம்யூனிஸ தத்துவத்துல இருக்கிற அசைக்க முடியாத நம்பிக்கையினால தான் இயக்கத்துல இருக்கேன். இன்னும் சொல்லப்போனா இங்கே தேவதையும், குட்டிச் சாத்தானும் இருக்குன்னு தெரிஞ்சேதான் வந்தேன்.

இயக்கத்துல மக்கள் சேர விரும்பாம இல்லை. நிறைய பேர் வரத்தான் செய்யறாங்க. அப்பிடி வர்றவங்க ஒரு வாரம், பத்துநாள், ஆறுமாசம் , ஒரு வருஷத்து, ஓடிப்போயிடுறாங்க. இயக்கத்தின் லட்சியம் பிடிச்சிருந்தாலும் நடைமுறை புடிக்கலை. அதுதுக்குக் காரணம் கேட்கிறப்ப' எனக்கு இந்தக் கம்யூனிஸ லட்சியம் பிடிச்சிருக்கு. ஆனா இந்த கம்யூனிஸ்டுகளைத்தான் பிடிக்கலை'ன்னு சொல்றாங்கா எவ்வளவு யதார்த்தமான பதில் இது?''

www.padippakam.com



# குமாரின் படுகொலை....

## சிங்கள பௌத்த பேரினவாதிகளின் ஈனச்செயல்



இங்கிலாந்தில் ''கேம்பிறிஜ்'' பல்கலைக் கழகத்தில் நாங்கள் மாணவர்களாக இருந்த போதுதான் குமார் பொன்னம்பலத்தை சந்தித்தேன். அங்கே இருந்த ஏனைய சிங்கள மாணவர் சிலருடன் குமார் கோபமும் அதிருப்தியும் கொண்டிருந்தார். தமிழ் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அவர் கொண்டிருந்த கருத்தினை அவர்கள் அனுதாபத்துடன் செவி மடுக்காததே அதற்கு காரணமாகும். இக்கட்டத்தில் நான் தலையிட்டு அவருடைய கருத்துக்களுக்கு மதிப்பளித்து மற்றவர்களும் அவ்வாறு செய்யுமாறு அவர்களை வேண்டிக்கொண்டேன். இவ்வாறாக ஆரம்பித்த நட்பானது அவர் மிக துர்ப்பாக்கியமான முறையில் மரணிக்கும் வரை நிலைத்திருந்தது.

இலங்கை திரும்பியதும் நாம் இருவரும் அரசியலில் இறங்கினோம். வெவ்வேறு முகாம்களில் பிரவேசித்தோம். பின்பு பல ஆண்டுகளாக நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. ஒருநாள் அவரை நான் கண்டியில் சந்தித்த போது அவர் உடனே என்னிடம் வினாவியது இதுதான் ''பாகு உங்களுக்கு சில சட்ட பிரச்சினைகள் எழுந்த போது ஏன் என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை? நாங்கள் தொடர்ந்தும் சினேகிதர்களாக இல்லையா?'' அவரிடம் இருந்து அத்தகைய உதவிகளை பெற்றுக் கொள்ளலாம் என நான் நினைத்திருக்கவே இல்லை? அதன் பின்பு நான் அரசியற் காரணங்களுக்காக நீதிமன்றங்கள் முன் நிறுத்தப்பட்ட போது அவர் தனது பெறுமதி மிக்க நேரத்தையும், பணத்தையும் கூட, செலவு செய்து எனக்காக வாதாடினார். 1980ல் இன்றைய கௌரவ அமைச்சர் அலவி.மௌலானா கௌரவ வாசுதேவ நாணயக்கார ((பா.உ) ஆகியோருடன் சேர்ந்து நான் பொது வேலை நிறுத்தம் மற்றும் சத்தியாக்கிரக போராட்டம் ஆகியவற்றின் மூலம் ஒரு அரச விரோத சதித் திட்டம் தீட்டியதாக குற்றம் சுமத்தப்பட்டேன். இந்த வழக்கு 11 வருட காலமாக நீடித்தது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படும் வரை குமார் கிரமமாக இவ்வழக்கில் அயராது ஈடுபட்டிருந்தார். அண்மையில் '1995ல் நான் சட்ட விரோதமாக ஆயுதங்களை பதுக்கி வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டேன். நான்கு வருடங்களாக குமார் எனக்காக வாதாடியதன் பயனாக இவ்வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

எமக்கிடையில் அரசியல் ரீதியாக பல வேறுபாடுகள் இருந்தன. ஆனால் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சுயவிருப்பின் பெயரில் மட்டுமே ஒன்றாக வாழலாம் என்பதையிட்டு எமக்கு உடன்பாடு இருந்தது. எனவே தமிழ் மக்களின் விடுதலையானது ஒற்றுமைக்கு இன்றியமையாததாகும். இந்த ஒற்றுமை என்பது தமிழ் மக்களுக்குரிய சமத்துவம் சுயாட்சி மற்றும் பிரிந்து செல்லும் உரிமை என்ற அடிப்படையிலேயே இருக்க வேண்டும் இந்த அடிப்படையிலேயே நாம் இருவரும் தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை ஆதரித்து வந்தோம். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பல கருத்தரங்குகளில் பங்கு பற்றுவதற்கு சந்தர்ப்பம் எமக்கு கிடைத்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் குமார் ஒரு அஞ்சாநெஞ்சம் கொண்ட சிங்கம் போல் எழுந்து நின்று தமிழ் மக்களின் விடுதலைக்கு எதிராக குரல் கொடுத்தவர்களை ஈவிரக்கமற்ற முறையில் எதிர்த்து தோற்கடித்தார். இந்த விடயத்தில் எம் இருவருக்கும் இடையில் எந்தவித முரண்பாடும் இருக்கவில்லை.

தமிழ் தலைவர்களில் குமார் ஒரு தனித்துவம் கொண்டவர். அவர் சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள மொழியில் தமிழ் தேசிய பிரச்சினையை எடுத்துரைத்தார். தொலைக்காட்சி அல்லது வேறு எந்த ஊடகம் மூலம் என்றாலும் சரி அவர் தமிழ் மக்களின் விடுதலைக்கு எதிரானவர்களை கையாளுவதில் அச்சமின்றி துணிச்சலுடன் செயற்பட்டார். இதே காரணத்திற்காகவே இவர் கொலை செய்யப்பட்டுள்ளார். தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக சிங்கள மக்களுக்கு சிங்கள மொழியில் எடுத்துக்காட்டினார். அரசாங்கத்திற்கு வெளியேயும் உள்ளேயும் உள்ள சிங்கள பேரினவாத கோழைகளும் பயங்கரவாதத்திற்கு எதிரான இயக்கமென்று அழைக்கப்படும் அமைப்பும் சிங்கள வீர விதானவும் தான் இந்த மிலேச்சத்தனமான கொலைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

இந்த படுகொலையை புரிந்தவர்கள் தமிழ் மக்களால் என்றென்றும் நினைவு கூரத்தக்க மாவீரனை உருவாக்கியுள்ளனர் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு பொன்னம்பலத்தை அகற்றுவதன் மூலம் அத்தகைய நூற்றுக்கணக்கான பொன்னம்பலங்களை உருவாக்குவதற்கே வழிபிறக்கும் தமிழ் பேசும் மக்களின் விடுதலை வென்றெடுக்கப்படும் வரை அவர்கள் மீண்டும் மீண்டும் உதித்தெழுவார்கள்.

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன



# கிழக்கு ஐரோப்பி நாடுகளின் வீழ்ச்சி

1970ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிபந்தனைகளை ஏற்கத் தொடங்கின. 1990ம் ஆண்டுகளில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பிரச்சினைகள் பூதாகாரமாக வெடித்தன. இதன் விளைவாக இப்பிராந்தியம் எங்கும் இரத்த ஆறு ஓடத் தொடங்கியது. பொருளாதார போராட்டங்களுடன், உள்நாட்டு யுத்தம் தொடர்ச்சியாக இடம் பெறத் தொடங்கின.

1970ம் ஆண்டின் நடுப்பகுதி, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக உள்ளது. சோவியத் ஒன்றியத்தினதும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் வேகமான ஆலைத் தொழில் வளர்ச்சி மேற்கு நாடுகளுக்கும் இவற்றுக்கும் இடையேயான வெற்றிடத்தை குறைத்திருந்தது. இருந்த போதிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உற்பத்தி தொகை அடிப்படையில் முன்னேறியதே தவிர தர அடிப்படையில்அபிவிருத்தி அடைந்திருக்கவில்லை. மிக உயர்ந்த தர உற்பத்திகள் சோவியத் ஒன்றியத்தின் இராணுவ, விண்வெளி சம்பந்தப்பட்டவையோடு மட்டுப்படுத்தப்பட்டன.

1970களில் ஏற்பட்ட பெற்றோல் விலை உயர்வால், கிழக்கு ஐரோபிய நாடுகளுக்கு பெரும் சிக்கல்கள் தோன்றின. இதனால் தொழிலாளரின் பொது வசதிகள்மீது கைவைக்கத் தொடங்கின.

இதன் தாக்கத்தால் சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்து பெருந்தொகையான கடன்களை இந்நாடுகள் பெறத் தொடங்கின.

உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியும், தொடர்ச்சியான ஆயுதப் போட்டியின் விளைவாகவும் சோவியத் ஒன்றியம் ஏனைய நாடுகளுக்கு உதவி செய்ய முடியாமல் போய் விட்டது. இதனால் போலந்து, கங்கேரி, றோமேனியா, யூகோஸ்லாவியா, ஜேர்மனி ஜனநாயக குடியரசு, தொடர்ச்சியாக மேற்கு நாடுகளுடன் தொடர்பு கொள்ள தொடங்கின. இந்த சூழலில், சர்வதேச நாணய நிதியம் தனது செல்வாக்கை இந்நாடுகள் மீது செலுத்தத் தொடங்கியது. இதனால் ஆட்சியில் இருந்த கிழக்கு ஐரோப்பிய அரசுகள் தமது பொருளாதார கொள்கைகளை மாற்றம் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன.

மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறையும், மேற்கு நாடுகளின் தொடர்ச்சியன நெருக்குதலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளை மேலும், மேலும் பொருளாதார முறைமையில் மாற்றங்களைச் செய்வதற்கு வழிகோலியது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வீழ்ச்சிக்கு அந்நாடுகளின் பொருளாதார தேக்கநிலை ஒரு காரணம் எனக் கூறப்பட்டாலும், புதிய பொருளாதாரக்கொள்கைகளை மிக வேகமாக செயற்படுத்தியமையே, பிரதான காரணமாக உள்ளது.

புதிதாக பதவியேற்ற அரசுகளுக்கு அவ் அரசுகளின் ஆலோசகர்களும், பிரதான பொருளாதார நிபுணர்களும் புதிய பொருளாதார திட்டம் என்னும் ஆடையை அணிவித்து தமது பரிசோதனையை செய்து பார்த்தனர். ஐரோப்பிய ஆலோசனையினை பின்பற்றிய தால் நாடு பழைய நிலைக்கு திரும்பியுள்ளது என இவர்கள் தம்பட்டம் அடித்த போதிலும், புதிய பொருளாதார முறைமையினால் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. மொத்த தேசிய உற்பத்தி 20 வீதத்தால் வீழ்ச்சியை தழுவியது.

1989ல் ஏற்படுத்தப்பட்ட தனியார் மயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வரலாற்றில் ஒரு கற்பனை வளர்ச்சியையே காட்டியிருந்தது. பல பல்தேசிய கம்பனிகள் வரிகள், என்றும் பல்வேறு வழிகளில், சுரண்டியமையே உண்மை நிலையாகும். இத்தகைய துர்ப்பாக்கிய நிலையையும், சமூக சூழலில் அதன் தாக்கத்தையும் ஒரு சிறு பகுதியினரே உணர்ந்து கொண்டனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத் படிப்பகம் ருளாதார மாற்றங்களால், எத்தகைய மாற்றங்களையும் சாதிக்க முடியாமல் போய் உள்ளது. பல்வேறுபட்ட சமூகச் சீரழிவுகளே எஞ்சி நின்றன. பெருந்தொகையான இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டு உள்ளன.

பெண்களின் வேலை வாய்ப்பு விகிதம் மிகக் குறைந்த நிலைக்கு சென்றுள்ளது. பெண்களுக்கு இருந்த சமூகப் பாதுகாப்பு முற்றாக தகர்ந்து போனது. ருசிய நாட்டு பெண்கள் விபச்சாரம் செய்வதற்காக இலங்கை வரும் அளவுக்கு நிலைமை மோசமானது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டமையால் இன்று உலகரீதியில் உணவு உற்பத்தி நிலையும் குறைந்து உள்ளது.

அமெரிக்காவினதும் மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் நயவஞ்சகத்தால் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பல்வேறுபட்ட துன்பச் சூழ்நிலையில் சிக்கியுள்ளது. இந்நிலைக்கு எதிரான போராட்ட அலைகள் ஆங்காங்கே தோன்ற தொடங்கியுள்ளன. இவை யாவும் எதிர்காலத்தில் கனலாக மாறும்.

இன்று ஐரோப்பிய நாடுகளில் கூட இடதுசாரிகள் மீண்டும் முக்கிய சக்தியாக திகழத் தொடங்கியுள்ளனர். சில அரசுகள் இடதுசாரி அரசுகளாகவும் உள்ளன.

எனவே எதிர்காலம் பொதுவுடமை வாதத்துக்கும் சார்பான காலமாகவே கனிய இருக்கிறது. இதற்கான முதல் போராட்டம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தே வெடிக்கும்.

www.padippakam.com



# மீண்டும் அதிகாரத்திற்கு வந்துள்ள இவரால் என்ன செய்ய முடியும்?

சந்திரிகா அவர்களின் வெற்றி யானது ஒரு தெளிவான வெற்றி என்று கூறமுடியாது. இதற்காக மோசடிகள் மூலம் வெற்றி பெற்றுள்ளாரென்றும் சொல்ல முடியாது. சில இடங்களில் மோசடிகள் இடம் பெற்றுள்ளது உண்மைதான். உதாரணமாக கங்குரான்கெட்ட, வத்தேகம, வாரியப்பொல, தம்புல்ல போன்ற இடங்களில் இங்ஙனம் நடந்துள்ளன.

எது எப்படியாயினும் இறுதி நேரத்தில் மக்கள் தமது பார்வையை சந்திரிகா மீது செலுத்தியுள்ளனர். இதனால் சந்திரிகாவின் வெற்றி உறுதியாகியது. தேர்தல் பிரச்சாரம் இடம் பெற்ற நாட்களில், ஜனாதிபதியின் நிலை மிக பின்தங்கிய இடத்திலேயே இருந்தது. ஆனால் அவரது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் செயல் நடைபெற்றதால், மிகக் கூடிய அனுதாப அலை அவர் பக்கம் வீசியது. இதனால் அவரின் பக்கம் சாதகமான நிலை தோன்றியது.

எத்தகைய சூழ்நிலைகள் காணப்பட்டாலும், இவர் இன்று நாட்டின் ஜனாதிபதி. மறுபக்கம் பிரபாகரனும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும், இவரை அழிக்க முற்பட்டமையானது மக்கள் அதிகம் வெறுக்கும் சம்பவமாக இருந்தது.

பிரபாகரனின் மீது மக்களுக்கு ஏற்பட்ட ஆத்திரம், ரணில் விக்கிரம சிங்க மீது திரும்பியது. ரணில் இக் காலப்பகுதியில் வடக்கு கிழக்கு நிர்வாகத்தை 2 வருடங்களுக்கு பிரபாகரனுக்கு கொடுப்பேன் என்றும், சந்திரிகாவை பிரபாகரனிடம் கையளிப்பேன் என்றும் தெரிவித்து இருந்தார்.

தேர்தல் முடிவுகள் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நடந்த கொடிய நிகழ்வுகளை மறக்கவில்லை என்பதை கோடிட்டு காட்டுகிறது. தபால் மூலம் வாக்களிப்பு, குண்டு வெடிப்புக்கு முதல் நடந்ததாகும். இதில் சந்திரிகா ரணிலை விட அதிக வாக்குகளை பெற்றுள்ளார். ஆனாலும் சந்திரிகா 50% வாக்குகளே பெற்றுள்ளார். 1994ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா 43.05% வாக்குகளை பெற்றிருந்தார். இது பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் இருந்து பெறப்பட்ட விகிதம் ஆகும். செல்லுபடியான வாக்குகளில் இவர் பெற்ற விகிதம் 62.28 விகிதம் ஆகும். ஆனால் இம் முறை சந்திரிகா பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 38.60% வீதத்தையே பெற்றுள்ளார். இது பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 51.12% வீதம் ஆகும். பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 6.45% வீத வாக்குகள் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. செல்லுபடியான வாக்குகளில், 11.16% வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

1994ல் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 109 லட்சமாகும். இதில் சந்திரிகா 47 லட்சம் வாக்குகளை பெற்றிருந்தார். இம் முறை பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 117 லட்சமாகும். இதில் சந்திரிகா பெற்ற வாக்குகள் 43 லட்சமாகும். இது எதைக் காட்டுகிறதென்றால், இவ்வளவு அனுதாப அலை வீசிய போதிலும் இவரது வாக்கு வங்கியில் இருந்து வாக்குகள் குறைந்துள்ளது. பிரபாகரனின், எத்தகைய இராணுவ முயற்சிகளும், புதிய பிரச்சினைகளும், புதிய நிலைமைகளையும் முழு பிரச்சினையில் ஏற்படுத்தும்.



தற்போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மிகக் கடுமையான இராணுவ நடவடிக்கைக்கு அரசு தயாராகும். இது எதிர்பார்த்ததுதான்.

பிரபாகரனுக்கு எதிரான பொது ஜன முன்னணிக்குள் இருக்கும் சக்திகள் இம்முயற்சிக்கு சந்திரிகாவிற்கு துணை நிற்கும். அண்மையில் யுத்த முனையில் ஏற்பட்டு இருக்கும் சரிவு இம்முயற்சிக்கு சவாலாக இருக்கும்.

ஜனாதிபதி அவர்கள் தான் பதவிக்கு வந்தவுடன் தீர்வு திட்டத்தை அமுல்படுத்தப் போவதாக மீண்டும், மீண்டும் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பொதுஜன முன்னணிக்கு வந்தவர்கள் தாம் தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கப் போவதில்லை என்று கூறியுள்ளனர். இதனால் தீர்வுபொதிக்கு ஆதரவானதும் எதிரானதும் ஆன குழுக்களின் முரண்பாடுகள் தோன்ற இடம் உள்ளது.

இந்த அரசாங்கம் தாம் பதவிக்கு வந்தால் தற்போதுள்ள அரசியல் யாப்பை தூக்கியெறிந்து விட்டு தம்மிடம் தயார் நிலையில் இருக்கும் புதிய யாப்பை அமுல் படுத்துவோம் என்றும் கூறியிருந்தனர். உண்மையில் இவர்கள் கூறியதில் அர்த்தம் இருக்குமாயின் சந்திரிகா அவர்கள் ஜனாதிபதி பதவியை விட்டு நீக்கி பிரதமராக வேண்டும். ஆனால் உயர் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியில் இருந்து 5 வருடகாலம் அனுபவிப்பதை நிறுத்தி விட்டு பிரதமராக முன்வருவாரா? தான் அதிகாரத்துக்கு வருவதற்காக சந்திரிகா எண்ணற்ற வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். பொலிசாருக்கு சம்பள உயர்வு, வேலையற்றோருக்கு வேலை அவற்றில் சில. தற்போது சந்திரிகாவுக்கு வீழ்ந்த வாக்குகள், சந்திரிகா தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாது போனால் பாராளுமன்றத் தேர்தலில் எதிராக வாக்களிக்கும் நிலை ஏற்படலாம். பாராளுமன்ற தேர்தலை சந்திரிகா தற்போதோ, அல்லது பின்பாகவோ நடத்தலாம். ஆனால், ஜனாதிபதி முறை நீக்க வேண்டுமானால், தான் கட்டுப்படுத்தக்கூடிய அரசியல் குழு அவரிடம் இருக்க வேண்டும். பாராளுமன்றக் குழு ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்து வைத்திருக்க முடியும். இதை ஜனாதிபதிக்கு சாதகமான பாராளுமன்ற குழுவினால் தடுக்க முடியும். எனவே ஜனாதிபதி முறையை நீக்க விரும்பினால் தனக்கு சாதகமானமானவர்களை பாராளுமன்றத்திற்கு வரவைக்க வேண்டும். அதே நேரம் தனக்கு எதிரானவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் அது பொது ஜன முன்னணிக்குள் உட்பிரச்சினை வரவழைக்கும்.

# இலங்கை முஸ்லிம்களும் கல்விப் பிரச்சினையும்

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக வடபகுதியில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டமை முற்றிலும் துரதிஷ்டவசமானதே. முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் நகரப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். இதைத் தவிர கிழக்கு மாகாணத்தில் அதிகளவில் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். பொதுவாக முஸ்லிம் மக்கள் வர்த்தக முயற்சிகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாகவே இவர்கள் நகரத்தை அண்டி வாழ்கின்றனர்.

இலங்கை முஸ்லிம் மக்களுக்கு கல்வி பெரும் பிரச்சினையாக உள்ளது. இவர்களின் தாய் மொழி தமிழ் ஆகும். நகரங்களில் தனி முஸ்லிம் பாடசாலைகள் மிகவும் குறைவு. இருக்கும் பாடசாலைகள் கூட சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. கொழும்பில் அமைந்துள்ள சாஹிரா கல்லூரியை எடுத்துக் கொண்டால், அப்பாடசாலை, ஏனைய சிங்கள பாடசாலைகள் போல் சகல வசதிகளைக் கொண்டதாக இருக்கிறது என்று கூறமுடியாது. கொழும்பு மாநகரில் வாழும் இலட்சக்கணக்கான முஸ்லிம் மாணவர்களின் கல்வி அவர்களது இத்தனி ஒரு பாடசாலை ஊடாக மட்டும் பூர்த்தி செய்துவிட முடியாது. சிங்கள மொழி மூலம் கல்வி கற்க விரும்புகின்ற முஸ்லிம் மாணவர்களுக்கு சிங்கள பாடசாலைகளில் அனுமதி கிடைப்பதில்லை. உதாரணமாக கண்டி மாநகரத்தில் இயங்குகின்ற அனேக முன்னணி சிங்கள பாடசாலைகளில், முஸ்லிம் மாணவர்களை சேர்த்துக் கொள்ள முடியாது உள்ளது. கொழும்பில் பிரதான சிங்கள பாடசாலைகளான ஆனந்த, நாலந்த கல்லூரிகளில் கூட முஸ்லிம் மாணவர்கள் சேரமுடியாத நிலை உள்ளது. முஸ்லிம் பாடசாலைகள் போதிய அபிவிருத்தி செய்யப்படாததால் அங்கு மாணவர்களை சேர்ப்பதில் ஆர்வம் காட்டப்படவில்லை. மிக அண்மையில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கொம்பனி தெருவில் இருக்கின்ற முஸ்லிம் பாடசாலை மூடப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயில்வதில் உள்ள சிக்கல்கள் காரணமாக வசதி படைத்த முஸ்லிம்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலத்தில் கல்வி கற்க வைக்கின்றனர். இதற்கும் கூட போதிய ஆங்கில பாடசாலைகள் இல்லை. வசதி படைத்த முஸ்லிம்கள் இங்ஙனம், செய்கின்றபோது, வசதி இல்லாத முஸ்லிம் மக்கள் என்ன செய்ய முடியும்? தமிழ் பாடசாலை என்றால் அபிவிருத்தி இல்லை. சிங்கள பாடசாலை என்றால் அனுமதி இல்லை. ஆங்கில பாடசாலை என்றால் பணவசதி வேண்டும்.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர். ஏற்கனவே கூறியது போல, இவர்களின் பிரதான தொழில் வர்த்தகமாக உள்ளது. வர்த்தகத் துறையில் முஸ்லிம் சமுதாயம் குறிப்பிடத்தக்களவு வெற்றியை பெற்றுள்ளது. ஆனால் கல்வியில் அத்தகைய நிலை பெறுவதற்கு அவர்களுக்கு பல்வேறு காரணிகள் தடையாக உள்ளன.

வர்த்தக நடவடிக்கைகள் கூட தற்போதைய அரச கொள்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ளன. திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக உலகின், பல பாகங்களிலும் உள்ள இராட்சத நிறுவனங்கள் இந்த நாட்டுக்குள் புகுந்துள்ளன. இதனால் உள்ளூர் வர்த்தக நடவடிக்கைகள் பெரியளவில் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன. எனவே சிறு உற்பத்திகளில் ஈடுபட்டு வந்த அனேக முஸ்லிம் வர்த்தகர்கள் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர்.

வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளம் பகுதியிலும், நாட்டின் ஏனைய நகரங்களிலும், வாழும் முஸ்லிம் மக்கள் பெரும் பிரச்சினைகளின் மத்தியில் வாழ்கின்றனர்.

இவர்களது கல்வி, தொழில், குடியிருப்பு என்பவை காரணமாக இம்மக்கள் பல்வேறு சோதனைகளின் மத்தியில் வாழ்கின்றனர். யுத்தம் எப்போது முடிவடையும், நாம் எப்போது எமது பழைய நிலைக்கு திரும்புவோம் என்ற அங்கலாய்ப்பிலேயே இம் மக்கள் வாழ்கின்றனர். தமது கோரிக்கைகளுக்காக பல்வேறு பட்ட போராட்டங்களை நடத்திக் கொண்டு இம்மக்கள் வாழ்கின்றனர்.

சிங்கள பௌத்த பேரினவாதிகளின் மிரட்டல்களும், இப்போது முஸ்லிம் மக்களுக்கு வந்துள்ளது. கண்டி, கம்பளை போன்ற இடங்களில், சிங்கள வீரவிதான இயக்கத்தின் செயற்பாடுகள், முஸ்லிம் மக்களுக்கு விரோதமாக உள்ளது. இவ் இனவாத அமைப்புகளின் இனவிரோத நடவடிக்கைகள், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு, விரிவுபட சந்தர்ப்பம் உள்ளது.

பௌத்த மதம் அரச மதமாக இருப்பதால் முஸ்லிம் மக்களின் மதரீதியான சுதந்திரங்களும் குறைக்கப்பட்டே உள்ளன. அவர்கள் தமது கலாச்சார நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு பல்வேறு வழிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முஸ்லிம் மக்களின், விடுமுறைகள் கூட குறைக்கப்பட்டுள்ளதை பலரும் அறிவர்.

எனவே எதிர்காலத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்காக முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்து போராட்ட அலைகள் கிளம்புவதற்கு வாய்ப்புக்கள் உள்ளனன. சிங்கள பௌத்த பேரினவாத விஷத்தை எதிர்க்கும் அனைத்து சக்திகளும் முஸ்லிம் மக்களின் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com






# துரத்தும் துயரங்கள்!

-பாலைநகர் ஏ.எச்.எம்.ஜிப்ரி

மேற்குப் புறமாய் சூரியன் சாய்ந்து கொண்டிருந்தான். சாயந்தரத்து சூரியனின் ஒளிக்கீற்றுகள் இப்போதும் பூமிக்கு மினுக்கம் தேய்த்தன. முற்றத்தில மடித்துக் கட்டப்பட்டுக் கிடந்த சாக்குக் கட்டிலை அவிழ்த்து, விரித்து, புழுதி தட்டி மண்ணில் கிடத்திவிட்டு, சௌந்தர்யமாய் நீட்டிப் போட்டுக் கொண்டு சாய்வதற்காய் முனைந்த என்னை, எங்கோ கிட்டிய தொலைவில் ஆதுரமாய் எழுந்த ஆரவாரம் சடுதியாய் எழுப்பியது. ஆதுரமாய் எழுந்த ஆரவாரம் அலையோடு பாயும் அருவியாய் எழுந்து என்னை ஆர்ப்பரித்துக் கடந்தது. கால்களுக்குள் நழுவிக் கிடந்த சாரத்தை மானசீகமாய் இழுத்துக் கொண்டு முற்றத்திலிருந்து வெளியேறி வீதியின் ஓர் ஓரமாய் நின்று கொண்டு பார்வை அம்புகளை ஆரவாரம் எழுந்த திசை நோக்கி எய்யத் தொடங்கினேன். வீதிவழியே பாய்ந்து சென்ற என் பார்வையம்புகள் சற்றுத் தூரம் சென்றதும் ஓர் இடத்தில் நிலை குத்தி நின்றது. அங்கே ஜனத்திரள் நிரம்பி வளிந்தது. மனிதர்கள் உருச்சிறுக்கப்பட்டவர்களாய் ஒலித்துக் கொண்டு திரிவதான பிரமை. வீதிப்பிரச்சினைகளை இயல்பாகவே வெறுத்துவிடும் மனம் இப்போது எழுந்திருக்கும் பிரச்சினை பற்றி அறிய வேண்டுமென்பதை எனக்கு அகத் தூண்டலினூடே வெளிப்படுத்திற்று. அவசரமாய் வீட்டுக்குள் சென்று தொங்கிக் கொண்டிருந்த சேர்ட்டையணிந்து கொண்டு சைக்கிளில் விரைந்தேன். எல்லை நெருங்க நெருங்க காரணம் புரியாத ஓர் அச்சம் மனதில் எச்சம் பீச்சினி. இப்போது இடத்தை மிகவும் அண்மித்து விட்டேன். சைக்கிளை மீண்டும் லேசாக எடுக்கக்கூடிய இடத்தில் கிடத்தி விட்டு கூட்டத்துக்குள் நுழைந்தேன். அடித்தும் விலக்க முடியாத ஜனத்திரள். எப்படியும் சுமார் நூறு பேர் இருப்பார்கள் என்று மனதுக்குள் மட்டந்தட்டினேன். ஊரின் கோடியிலிருந்த அந்த இடத்திலேதான் சுமனின் மாமியின் வீடு இருந்தது. குழுமி இருந்தவர்களில் யாரிடமிருந்தும் பேச்சுக்குரல்கள் எழவில்லை. எல்லாம் அழுகுரல்களாகவே இருந்தன. யாரிடமாவது துப்புத்துலக்கலாமென்ற எண்ணத்துடன் அருகில் நின்றவர்களை நோக்கினேன். எல்லாம் பரிச்சயமற்ற முகங்களாகவே இருந்தன. நானாவது பிரச்சினை பற்றிப் பேச்சுக் கொடுக்கலாமென முனைந்தும், என் கேள்விக்கு யாரும் பதிலளிக்கக் கூடிய நிலைமையில் இல்லை எனபதால் கேள்வி கேட்பதை கைவிடலானேன். அழுகைக் குரல்கள் பயங்கரமாய் காதுகளை இம்சைப்படுத்தத் தொடங்கின. மேலும் அங்கே தரித்து நிற்பதற்கும் மனம் ஒப்பவில்லை. கூட்டத்திலிருந்து விலகிச் செல்லவும் பிறகு முடியாமல் போயிற்று. விதியை நொந்து கொண்டு கூட்டம் கலையும் வரை காத்திருக்கலானேன். அங்கே எழுந்த அழுகுரல்கள் பெரும்பாலும் பெண்களுடையதாகவே ஒலித்தன. அழுகுரல்களில் ஒன்று அடிக்கடி என் காதுகள் கேட்டுப் பரிச்சயப்பட்டதாகவும் பட்டது. ''அழாம உள்ளுக்குப் போகா'' என்ற ஆண்களின் தடித்த குரலும் ஆங்காங்கே மேலெழுந்தவாரியாய் ஒலித்தன. இப்போது அழுகுரல்கள் சற்று ஓய்வதான பிரமை. காதுகளை கூர்மையாக்கினேன். ஆமாம்! அழுகுரல்கள் ஓய்ந்து கொண்டு போயின. விசரமும் மெல்ல மெல்ல களையத் தொடங்கிற்று. இப்போது கூட்டம் ஓரளவு கலைந்து விட்ட சூசகம் தெரிந்தது. பிரச்சனை பற்றி துப்புத்துலக்குவதற்கும் ஓரளவு வசதி கிடைத்தது. என்னருகில் நின்ற ஒருவனிடம் பேச்சுக் கொடுத்தேன். அவனும் பரிச்சயமற்ற புன்முறுவலுடன் என்னை ஏறிட்டான்.

''பிரச்சினை என்னாண்டு.....'' என்று மானசீகமாய் வார்த்தைகளை நீட்டப் போன என்னை இடைமறித்தான். ''அதுவா? சுமன் இயக்கத்துல இருந்தவன் அவன் கல்குடா ஆளு. அவன் சண்டையில் இறந்துட்டான். இது அவன் மாமி வீடு. அவன் பொடிதான் இங்க வந்திருக்கு. அதுக்குத்தான் இவ்வளவு கூட்டம். அவன் உறவுக்காரங்கதான் இப்ப அழுதுக்கிட்டிருந்தவங்க'' என்றொலித்தது அவன் குரல் என்பதிலுக்காய் காத்திராமல் இடத்தைக் காலி செய்திருந்தான். அவன் கூறிய வார்த்தைகள் எனக்குள் புல்லரிக்கத் தொடங்கிற்று. ''சுமன்.... சுமன்'' என என் உதடுகள் உணர்ச்சிவசப்பட்டன. சுமனின் ஞாபகக் கோடுகள் மனதில் விழுந்து சென்றன. அவனின் பழைய முகம் என் மனக் கண்களுக்குள் நிறைந்தது. கடைசியாக சுமனின் உயிரற்ற உடலைப் பார்த்து விட்டுப் போவதற்காய் கூட்டத்தில் ஒருவனாய் நானும் உட்பட்டேன். அங்கே புடவை விரிக்கப்பட்ட திண்ணையொன்றில் சுமன் கிடத்தப்பட்டிருந்தான். சுமனின் உடலெங்கும் இரத்தக்கறை படிந்திருந்தது. நெஞ்சின் சில பகுதிகளை துப்பாக்கிக் குண்டுகள் துளைத்திருந்தன. நெற்றியை வளைத்துப் புடவையொன்றினால் கட்டப்பட்டிருந்தான். அவன் பிறந்ததும் அவனுக்காய்த் தாலாட்டுப் பாடிய அவன் தாய் இப்போது ஒப்பாரி பாடுகிறாள். இன்னும் கொஞ்ச நேரமேனும் அங்கே தரித்து நிற்க மனம் ஒப்பவில்லை. அவன் அம்மாவைக் கண்டும் காணதவனாய் அங்கிருந்து அகன்றேன். வீதியின் ஒதுக்குப்புறமாய் மல்லாந்து கிடந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு வீடு நோக்கி விரையத் தொடங்கினேன். மனதில் கணிசமான துயரம், படிந்திருந்தால் சைக்கிள் என்னைச் சுமக்கக் கொஞ்சம் சிரமப்பட்டது. நாசூக்காய் ஓடிவந்த நான் இப்போது தாழ முடியாத மனச்சுமையுடன் விரைந்து கொண்டிருந்தேன்.

வீட்டுக்கு வந்த நான் சைக்கிளை ஓரத்தில் போட்டுவிட்டு சாக்குக் கட்டிலில் போய் ''தாம்'மென்று விழுந்தேன். கட்டிலும் என்றுமில்லாதவாறு ''மறக்''கென்று ஒலியெழுப்பி ஓய்ந்து போனது. சுமன் பற்றிய நெஞ்சின் வலிகள் தவிர்க்க முடியாமல் போயிற்று. சுமனின் பால்யப் பருவத்து நினைவுகள் மனதுக்குள் விழுந்து பழையன மீட்டத் தொடங்கின.

வாலா தாபம் விழும் பொழுதினில் தான் எனக்கு அவனின் தரிசனம் கிடைத்தது. பின்னாளில், அவனின் நடத்தைகள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. இனத்துவேசம் மறந்து இருவரும் மித்திரபேதத்தோடு பழகினோம். ''பாசிக்குடா'' கடற்கரையில் அமர்ந்து கொண்டு தமது பிரச்சினைகள் பற்றியும், ஏனைய விடயங்கள் பற்றியும் அளாவலாவிக் கொள்வோம்.

''மச்சான்! எதுக்குடா நாம் இப்படிப் பயந்து வாழ்றம்?'' அடக்க முடியாமல் கேட்டு விடுவான்.

''ஜுனைத் பயந்து வாழ்றது பற்றி நாம தான் பேசிக்கொள்ளுறம். ஆனா தலைமைத்துவம் வகிக்கிறவங்க யாரும் இதுபற்றி யோசிக்கலையடா'' வழமையான பதில் அவனிடமிருந்து பிறக்கும்.

''ஆமாண்டா சுமன் அனுபவிக்கிற அருமை எமக்குத்தான் புரியுது.

நாடாளுறவங்களுக்கு எதுவுமே புரியுற மாதிரியில்ல'' என்று நானும் என் ஆதங்கத்தை வெளிப்படுத்துவேன். கடலின் நுரை தள்ளிக் கரை தடவும் உவரலைகள் பேரிரைச்சலோடு எழுந்துபோவம்.

சுமன் என்னிடம் அடிக்கடி முறையிடுவான், ''ஜுனைத்! இயக்கக்காரங்க எங்கட பள்ளிக்க புகுந்து மாணவர்களப் புடிசசிட்டுப் போறாங்கடா அதை நினைச்சா எனக்கும் ரொம்ப பயமா இருக்குடா'' என அவனின் குரல் குலையும் போது மனதை அரிவாள் கொண்டு அறுப்பதான பிரமை எனக்கு.

''மச்சான்! இதென்னடா வாழ்க்கை இப்படியும் வாழத்தான் வேணுமாடா?'' என நான் தாங்க முடியாது கேட்டு விடுவேன்.

ஒரு உலோபியின் பணப் பெட்டி போல் அவன் எப்போதாவது தான் வாய் துறப்பான். அவனின் வார்த்தையில் ஓர் தத்துவம் பொதிந்திருப்பதை நான் மானசீகமாய் உணர்வேன்.

''ஜுனைத் இந்தக் கடல்ல அலைகளுக்கு மத்தியில் நாம எப்படி கஸ்டப்பட்டு நீந்துறமோ அப்புடித்தான் நாம வாழ்க்கையிலையும் எதிர்நீச்சல் போட வேண்டி இருக்கு இதுதான் வாழ்க்கையின் மாமூலும்கூட''

என அவனின் தத்துவ வரிகள் நீளும். அவன் கூறும் தத்துவங்களையெல்லாம் மனதின் ஆழமான பக்கங்களில் ஆணி அடித்து மாட்டி இருக்கிறேன்.

அன்றொரு நாள் கடற்கரைக்கு வந்திருந்த சுமன் மிகவும் பதற்றப்பட்டிருந்தான். மிகவும் படபடப்புடன் காணப்பட்டான். இனம் புரியாத ஒரு அச்சம் அவனை ஆக்கிரமித்திருந்தது.

''என்னடா சுமன் ஒரு மாதிரியாயிருக்கே?'' அலைபாடும் சங்கீதத்தோடு என் குரல் மெல்லக் கசிந்தது.

''ஒன்னுமில்லடா ஜுனைக் இன்றைக்கும் இயக்கக்காரங்க ஸ்கூலுக்க வந்து நாலைந்து பேரப்புடிச்சிட்டுப் பெயித்தாங்கடா. என்ர கையையும் ஒருவன் பிடிச்சு இழுத்திட்டான்'' என்று சொல்லும் போதே அவன் கண்கள் கலங்கி நீர்வடிந்து அவன் கன்னத்தைக் காயப்படுத்திற்று. சுமனின் வார்த்தைகளை என்னால் பொறுதிக் கொள்ள முடியாமல் போயிற்று.

சுமன் என்னடா சொல்ற?'' உணர்ச்சிவசப்பட்டுக் கேட்டுவிட்டேன்.

''என்ன செய்றதுன்னே புரியலடா ஸ்கூல் பக்கம் கூட போகப் பயமாக்கிடக்குதுடா. படிப்பையும் கைவிட முடியல'' அழுகையினூடே அவன் குரல் மெல்ல நசிபட்டுக் கசிந்தது.

''நீ அழாத சுமன் நாளைக்கே நீ எங்கட ஸ்கூலுக்குப் புறப்பட்டு வா உனக்கு நான் இடமெடுத்துக் கொடுக்கன்'' என்று அவனை ஆசுவாசப்படுத்தி விட்டு வீட்டுக்கு வந்தேன்.

மறுநாள் சுமன் வாக்களித்தது போலவே என் கல்லூரிக்கு சேர்வதற்குரிய சகல ஆவணங்களுடனும் வந்திருந்தான். இருவரும் ஒரே வகுப்பென்பதால் அன்றிலிருந்து வகுப்பறையிலிருந்தே எங்கள் பிரச்சினை பற்றி துப்புத்துலக்குவோம். பின்னாளில், சுமனை அடிக்கடி என்வீட்டுக்கு கூட்டி வரத் தொடங்கினேன். கர்விக்குணமற்ற அவன் மீது வீட்டாரும் அளவு கடந்த ஆதரவு காட்டத் தொடங்கினர். யதார்த்த வாழ்க்கையில் அவன் அனுபவிக்கும் துயரத்தை எண்ணி அவர்களும் சில நேரங்களில் கண்கலங்கியதுண்டு.

ஒருநாள் சுமன் வகுப்பறையில் வைத்து என்னிடம் கூறியது என் இதயத்தின் மையத்தில் யாரோ கத்தியால் குத்துவது போலிருநதது.

''ஜுனைத் என் ஊரத்தாண்டி இங்கே வரும்போதெல்லாம் இயக்கக்காரங்க என்மீது ஒரு சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறாங்க. இங்கால வந்தாலும் சந்திக்குச் சந்தி நிற்கிர இராணுவக்காரங்க என்னென்னெல்லாமோ சொல்லி மிரட்டுராங்கடா. இன்றைக்கும் ஒருவன் அறைஞ்சு போட்டான்'' -இதை என்னால் தாங்க முடியாமற் போயிற்று. அழுதே விட்டேன். விசனம் நிறைந்த அவன் என்னை ஆசுவாசப்படுத்தினான். அவன் என்னை ஆசுவாசப்படுத்துவது அதுதான் கடைசி முறை என்பதை நான் அந்நாளில் உணர்ந்திருக்கவில்லை. வகுப்பு முடிந்ததும் விடைபெற்றுப் போன சுமன் மறுநாள் பாடசாலைக்கு வரவே இல்லை. பதறிப் போனேன். துடித்தேன். என்மனக்குமுறலை யாரிடமும் சொல்ல முடியாது தவித்தேன், அன்று பாடங்களில் கவனம் செலுத்த என்னால் முடியாமல் போயிற்று. எண்ண அலைகள் தறிகழன்று சுமன் பக்கம் விஸ்தாரப்பட்டிருந்தது. சுமனின் நிலை பற்றி மனம் சல்லாபித்தது. விசனம் நிறைந்த அவனின் வாழ்வு எத்தனை யுகங்களை விழுங்கும் என்ற நினைப்பும் அவன் பற்றிய வலிகளை மனதில் லேசாய்த்தூவின. ஏதாவது முக்கிய வேலையின் நிமித்தம் வராமல் விட்டிருப்பான் என நானே மனதைத் தேற்றினேன். பாடசாலையில் சுமனின்றி தனியனாகத்தான் தரித்து நிற்க மனம் ஒப்புவதாய் இல்லை. அதனால் ஒருவரின் அனுமதி இன்றியே பாடசாலையின் பரியந்தம் கடந்திருந்தேன். வீட்டிலுள்ளவர்களிடமும் சுமனின் அன்றைய தரிசனம் இல்லாதது பற்றிக் கூறி மாண்டன். அவர்களுக்கும் கண் கலங்கியது. வேதனையோடு உம்மாவின் குரல் வெளிப்பட்டது.

''பாவம் அந்த அப்புராணிக்கு என்னதான் நடந்துட்டுதே'' என்ற உம்மாவின் வேதனைக் குரல் என்னைத் துயரிற் தள்ளிற்று. அன்று ஒரு ''சுல்தியாய்'' எந்நிலைமை மாறியிருந்தது. ஒரேயொரு நாளே அவனின் தரிசனம் கிடைத்ததது என்னை மிகவும் துக்கித்தது. அன்றைய அந்திப் பொழுது, மேற்கே செவ்வானம் மினுமினுத்தது. குயில் கூவும் சத்தம் எங்கோ காதுக் கெட்டும் தொலைவிலிருந்து கேட்டது. அமைதி தொலைந்த அன்றைய பொழுதைத் தொலைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டுப் போனேன். நான் நாடியில் கைகளைக் குத்திக் கொண்டு ஈசிச்சேரில் குந்தியிருந்த போதே இருள் மெல்ல மெல்ல பரவத் தொடங்கிற்று. பின் இருள் அடர்ந்து, பரந்து செறிந்து காணப்பட்டது. அன்று தான் எனக்கு இரவின் நீளம் புரிந்தது. தூக்கமின்றியே அன்றைய இரவு முழுவதும் துக்கித்திருந்த நான் வைகறைப் பொழுதை கோழி கூவிப் புலப்படுத்திய போதுதான் வீட்டுக்கதவை விலத்திக் கொண்டு வெளிப்பட்டேன். காலைக் கடன்களை அவசர அவசரமாய் முடித்துவிட்டு என்று மில்லாதவாறு வேகமாக பள்ளி நோக்கி விரைந்தேன்.

கொஞ்சநேரக் காத்திருப்புக்குப் பின்...

வரவில்லை. அவன் அன்றும் வரவில்லை. ''இலவு காத்த கிளி''யாய் அவனின் தரிசனத்தை எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றம். அன்றும் எனக்கு இருப்புக் கொள்ள முடியாத தவிப்பு. பாடசாலை விட்டதும் ஆதுரமாய் வெளிப்பட்டு தாபத்தோடு வீடுவந்தேன்.

சுமனின் தரிசனத்தை எதிர்பார்த்திருப்பதும், பின் ஏமாற்றம் அடைவதுமாய் என் காத்திருப்பு ஐந்து நாட்கள் நீடித்திருந்தது.

சுமனின் தரிசனம் முற்றுப்பெற்று விட்டதை மானசீகமாய் உணர்ந்தேன். என் ஊரின் கோர்டிக்கப்பால் சென்று அவனின் ஊர்ப் பரியந்தம் வரைக்கும் சென்றேன். அவன் பற்றிய தகவல் எனக்குக் கிடைக்கவே இல்லை. ஈற்றில் கடல் கரைக்கு வந்தேன். சேதப்பட்டிருந்த கட்டடமொன்றில் உட்கார்ந்திருந்தேன். மனத்துயரம் இறங்கும் வரைக்கும் அழுது தீர்த்து விட்டு வீட்டுக்கு வந்தேன். அன்றிலிருந்து நெஞ்சின் வலிகளோடு சுமனின் நினைவுகளையும் சுமந்து கொண்டு காலம் கடக்க வேண்டியிருந்தது.

காலம் ஓடிச் சென்று சுமார் இரண்டு வருடங்களை கடந்துவிட்டிருந்த காலப்பகுதி அது. நான் மிக நீண்ட யுகங்களுக்குப் பின் பாசிக்குடா கடற்கரைக்குச் சென்ற போது இடைவழியில் சுமனைச் சந்திக்க நேர்ந்தது. தோள்களிலே கணத்த துப்பாக்கியுடன் பைசிக்கிளில் வந்த என்னை இடைமறித்தான். மிக நீண்ட நாள்களுக்குப் பின் அவனைச் சந்திக்க நேர்ந்த போது அவனுடைய கோலம் முற்றிலும் மாறியிருந்தது. பழைய சுமன் அன்றே இறந்துட்டான் என எண்ணும்படி செய்திட்டு அவனின் கோலம். அவனோடு ஆத்மார்த்தமாகப் பேசவோ, குசலம் விசாரித்துக் கைகுலுக்கிக் கொள்ளவோ மனம் ஒப்பவில்லை. மானசீகமாய் அவனிடமிருந்து கழன்றேன். பின் வந்த நாட்களில் அவன் பற்றிய ஞாபகக் கோடுகள் மங்கிப் போயிற்று. வாழ்க்கைச் சாலையில் சில நிகழ்வுகள் தூர்ந்து போவது போலன்றி, ஒருதற்காலிக மறதியாக அவனின் ஞாபகங்களும் கரையொதுங்கி இருந்தன. நானும் பள்ளிப் படிப்பை முடித்த இடைக் காலத்தில்தான். தீவிர வேலையொன்றில் என்னைத் தொலைத்திருந்தேன். அவனைத் துரத்திய துயரங்கள் அவனை வென்று விட்டதை இப்போது மானசீகமாய் உணர்கிறேன். கட்டிலை விட்டு மெல்ல எழுகிறேன். சுமனின் உருவம் மனத்திரையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் கரையத் தொடங்கியது.

சுமனின் மாமியின் வீட்டை மீண்டும் ஒருமுறை எட்டிப் பார்த்தேன். இந்நேரத்தில் சுமன் மண்ணின் மடியில் சேர்ந்திருப்பான் என்பதை மனம் மறுதலிக்காமல் ஏற்றது.

(முற்றும்)

www.padippakam.com



# கொழும்பில் புறக்கணிக்கப்பட்ட 66,000 குடும்பங்கள் நடுத்தெருவில்...

**கொழும்பு மாநகரசபை வரவு செலவு திட்ட விவாதத்தின் போது நவசமசமாஜக் கட்சி உறுப்பினர் திருநாவுக்கரசு ஆற்றிய உரை**

கௌரவ நகர முதல்வர் அவர்களே, இன்று உங்கள் கன்னி வரவு செலவுத்திட்டத்தின் மீது எனது கன்னி வரவு செலவுத் திட்ட உரையினை நிகழ்த்த விழைகிறேன். முன்னரைப் போலவே, வரவு செலவுத்திட்டத்தின் முகவுரையில் மக்களுக்கு ஒரு உயர்ந்த வாழ்க்கை நிலையை அளிப்பது குறிக்கோளாகவும், எல்லா வளங்களையும் உள்கட்டமைப்பு வசதிகளையும் மிகக் கூடுதலாகப் பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்றுவதை நோக்கமாகவும் கொண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லோரும் ஒருமுகமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி அடைய வேண்டிய பல இலக்குகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் இவற்றை நாம் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டு, அவற்றை நிறைவேற்றாமல் விடுவோமேயானால், பொதுமக்களால் நாம் போக்கிரிகள் என இனங்காணப்படுவோம்.

நேற்று வரவு செலவுத்திட்ட விவாதத்தினை ஆரம்பித்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் கணேசலிங்கம் வரவு செலவுத்திட்டத்தினை மிக விரிவாக ஆராய்ந்தார். ஆகையால் நான் அந்த விபரங்களை மீண்டும் இங்கு கூற வேண்டியதில்லை. இந்த வரவு செலவு திட்டமானது பெரும்பாலும் வெறுமையானதாகத் தோன்றுகின்றது என்று மட்டும் முதலில் கூறி வைக்க விரும்புகிறேன். அங்கே கொடுக்கப்பட்ட பல புள்ளி விபரங்கள் திகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே அவை நடைமுறைக்கு ஒவ்வாதவை என்று கூற வேண்டும். வரவு செலவுத்திட்டம் தான் எதிர்வரும் ஆண்டின் வேலைத்திட்டம் ஆகும். எனவே அது உண்மையாக பிரயோசனமாயிருக்க வேண்டுமாயின் அதனை மிக நுணுக்கமாகவும் மதிநுட்பமாகவும் தயாரிக்க வேண்டும்.

கொழும்பு மாநகர சபையினால் வழங்கப்படும் சில சேவைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

### குப்பை கூழங்கள் அகற்றல்

இச்சபையில் ஏராளமான தொழிலாளர்கள் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு வேண்டிய ஆக்க ஊக்கத்தினை வழங்கி இப்பணியினை திருப்திகரமாக ஆற்றுவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும். மாறாக, இதனை தனியார் கைக்கு ஒப்படைத்ததன் காரணமாக, மாநகர சபைக்கும் அதன் தொழிலாளர்களுக்கும் பலத்த பங்கம் ஏற்பட்டு வருகிறது. ஒப்பந்தகாரராகிய அபான்ஸ் கம்பனிக்கு வருடம் ரூ 144 மில்லியன் கொடுப்பது மிகவும் அதிகரித்த செலவீனமாகும். மனிதவள (பணியாளர்) செலவீனத்தில் 50% க்கு மேலான தொகை பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத நாட்கூலி தொழிலாளர்கள் ஊதியமாக 299.8 மில்லியன் (அதாவது முழுத் தொகையிலும் சரிபாதிக்கு மேலான தொகை) ஒதுக்கப்பட்டுள்ளதை நாம் மறந்துவிடக்கூடாது.

நகர முதல்வர் அவர்களே, நீங்கள் எப்பொழுதும் தனியார் துறை மற்றும் வர்த்த சமூகத்தினரை பங்குதாரர்களாக கொள்வதன் அவசியம் பற்றி வலியுறுத்தி வருவதுண்டு. இவை இறுதியில் மக்களின் நலன்களுக்கு குந்தகமாகவே அமையும்.

மாநகர சபையின் சேவையிலிருக்கும் தொழிலாளர்களை ஏன் பங்குதாரர்களாக காள்ளக்கூடாது? ஏன் அவர்களுக்கு போதிய ஆக்க ஊக்கத்தினை வழங்கி வரிபிறுப்பார்கள் என்மை கருதி கூடுதலான தொழில்திறனை கட்டி வளர்க்க கூடாது? சிறப்பாக சேவை யாற்றக் கூடாது.

### மலக்குழாய்த் தொகுதி வடிகால்:

1999 செப்ரெம்பர் மாதத்தில் அதாவது நான் இந்த சபையில் அங்கத்துவம் பெற்று 3ம் மாதம் கழிந்த பின் கீழ்வரும் பிரேணையினை சபையில் விவாதிப்பதற்காக சமர்ப்பித்திருந்தேன்:-

''கொழும்பு நகரத்தின் மலக்குழாய்த் தொகுதி வடிகால் முறைமையானது 100 வருடங்களுக்கு மேலான பழைமை வாய்ந்ததால், அதனை கூடிய விரைவில் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.''

இப்பிரேரணை விவாதத்திற்கு உள்ளடக்கப்படவில்லை. இது தொடர்பாக ஏற்கனவே வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காரணம் கூறப்பட்டது. ஜேர்மனியிடமிருந்து கிடைக்கவுள்ளதாகக் கூறப்படும் ரூ.2000 மில்லியன் இதற்குப் பயன்படுத்தப்படப் போவதாக வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்படுகிறது. இதற்காக 1998ல் 237 மில்லியனும், 1999 ரூ 275 மில்லியனும் செலவு செய்யப்பட்டதாகவும் அறியக் கிடக்கிறது. மேற்கூறப்பட்ட ரூ 2000 மில்லியன் கைக்கெட்டாத நிலையில் அதனை வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கியதால் பெரிய வீக்கம் உண்டாகியுள்ளது.

### நீர் விநியோகம்:

நாம் எதிர்நோக்கும் அடுத்த பெரிய பிரச்சினையாக உள்ளது அதுதான் யதார்த்தமாகும். அதைவிடுத்து இவ்விடயம் நீர்விநியோகம் மற்றும் வடிகால் சபைக்குரியது என்று கூறுவதில் அர்த்தமில்லை. நடைமுறையில் கொழும்பு மாநகர சபைதான் இந்த சிக்கல் நிறைந்த பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஏறத்தாழ 4 மாதங்களுக்கு முன்பு நான் இப்பிரச்சினை தொடர்பாக கௌரவ நகர முதல்வருடன் கலந்துரையாடினேன். குறிப்பாக கொழும்பு, மத்தி மற்றும் கொழும்பு வடக்கு வாழ் மக்கள் படும் கஸ்ரங்களை எடுத்துரைத்தேன். அம்பத்தலையிலிருந்து எலிகவுஸ் நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு வருவதற்கு ஆரம்பத்தில் பொருத்தப்பட்ட குழாய்த் தொகுதியில் சிக்கல் ஏற்பட்டதாகவும், புதிய குழாய்த் தொகுதி இயங்க தொடங்குவதற்கு இன்னும் 1 வருடமாவது செல்லுமென எனக்கு கூறப்பட்டது. ஆனால் இத்தகைய காலக்கெடுக்கள் நீண்டு கொண்டிருக்கும் நிலையில் கசப்பான குற்றச்சாட்டுக்களை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

### சேரிக்குடிகள்

சேரியில் வாழும் 66,000 குடும்பங்கள் தான் கொழும்பு நகரில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளன. அவர்களுக்கு வதியக்கூடிய வீடு, மற்றும் நீர் போன்ற வசதிகள் கிடைப்பது அரிது. அவர்களை தற்போது நகர அபிவிருத்தி அதிகாரசபை ''குறைந்த வசதி அளிக்கப்படும்'' (Under Served) மக்கள் எனவகைப்படுத்தியுள்ளது. தற்போது பொரளை வனாத்தமுல்லையில் நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொடர்மாடி போன்ற பல வீட்டுத் தொகுதிகள் சேரிவாழ் மக்களுக்காக நிர்மாணிக்கப்படும் என கூறப்படுகின்றது. ஒரு சில நாட்களுக்கு முன்புகூட இந்த 66 ஆயிரம் குடும்பங்களுக்கும் வீட்டுவசதி செய்து கொடுக்கப்படும் என கௌரவ வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் கூறியுள்ளார். இதில் பிரச்சினை என்னவென்றால் இத்தகைய வாக்குறுதிகள் காலத்துக்கு காலம் வழங்கப்பட்டு வந்தாலும் அவற்றை நிறைவேற்றுவதில் மட்டும் நீண்ட கால இழுத்தடிப்புகள் தான் காணப்படுகின்றன. உண்மையில் இவையெல்லாம் நடைபெறுமோ என்ற கேள்விகூட எழுத்தான் செய்கிறது. ஏனென்றால் இவற்றுக்கு மிக சொற்ப நிதியே ஒதுக்கப்படுகின்றது. உதா ரணமா க அண்மையில் இடம்பெற்ற செயலமர்வு ஒன்றின் போது இந்த வீடமைப்பு திட்டத்தின் கீழ் 100 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை அலுவலர்கள் கூறினர். இது யானைப்பசிக்கு சோளப்பொரி போட்ட கதை போல இருக்கிறது. எதிர்காலத்தில் கூட இதற்கான நிதி ஒதுக்கீடுகள் மந்தமாகவே இருக்குமென்றும் அதிகளவு அரசியல் அழுத்தம் அவசியம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விவாதத்தில் நேற்று உரையாற்றிய கௌரவ அங்கத்தவர் ஹனீபா இஷாக்கும் இப்பிரச்சினை பற்றி குறிப்பிட்டிருந்தார். அவர் கூறிய கருத்துக்களை நான் ஆமோதிக்கின்றேன். சேரிவாழ் மக்களை தாழ்த்தி நோக்கும் போக்கு எம்மத்தியில் நிலவுவது துர்ப்பாக்கியமானதாகும். அவர்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்பட்டாலும் அவர்கள் மீண்டும் சேரிகளுக்கு திரும்பி செல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு அடையாள முத்திரை குத்தப்பட வேண்டும் என்று கூட சிலர் பரிகாசமாகக் கூறியதை நான் கேட்டிருக்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை கூறிவைக்க விரும்புகின்றேன். அதாவது, மூன்றாவது உலக மக்களாகிய எம் எல்லோரையுமே ஏகாதிபத்திய அரசாங்கங்கள் தாழ்த்தியே நோக்குகின்றன என்பதை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும்.

பொருளாதார நிலை முதலியன பற்றி ஒரு வார்த்தை கூறி வைக்க விரும்புகின்றேன். ஏனென்றால் அவ்நிலைமைகள் கொழும்பு மாநகரசபையின் விவகாரங்களையும் பாதிக்காமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கில்லை இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இந்த அபாயகரமான நிலைமைக்கு ஐ.தே.கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் உள்ள பொ.ஐ. முன்னணி இரண்டுமே ஏறத்தாழ சமமான பொறுப்பை ஏற்க வேண்டும் இவ்விரு கட்சிகளுக்கும் அரசியல் உறுதியோ அவசியமான தொலை நோக்கோ நாட்டு நலனில் அக்கறையோ கிடையாது. ஆகையாலேயே தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது. இவ்விரு கட்சிகளும் தத்தமது வாக்கு வங்கிகளையும் அடுத்த தேர்தலையுமே எண்ணி செயற்பட்டு வருகின்றன.

எனவேதான் இடதுசாரி இயக்கம்தான் எஞ்சியுள்ள மார்க்கம் என்பது தெளிவானதாகும், யார் எதை சொன்னாலும் இடதுசாரி இயக்கம் முன்னேறி வருகின்றது என்பதில் ஐயமில்லை. கார்ள்மாக்ஸ் இந்த ஆயிரமாண்டில் தலைமகன் (Man of the Millenium) என பிரகடனப்படுத்தியுள்ளமை தெரிந்ததே. அவர் தமது வாழ்நாளில் மிக மோசமாக சாடப்பட்டவர் ஆனால் இன்று, அவர் முன்வைத்த சமதர்ம கோட்பாடுகள் எக்காலத்திற்கும் எவ்வளவு தூரம் பெறுமதியானதும் அத்தியாவசியமானதும் என்பதை மானுடவர்க்கம் உணர்ந்துள்ளது.

இறுதியாக இன்னுமொன்றைக் கூற விரும்புகின்றேன். இந்த சபையின் அலுவல்கள் 3 மொழிகளிலும் நடத்தப்படுவதாக கூறப்பட்டாலும் இங்கே ஒரு தமிழ் தட்டெழுத்தாளரோ, சுருக்கெழுத்தாளரோ அல்லது ஒரு தமிழ் தட்டச்சோ இருப்பதாக தெரியவில்லை. இப்போது கௌரவ நகர முதல்வர் சில வசதிகள் இருப்பதாக குறிப்பிடுகிறார். ஆனால் எனக்கு கடிதங்கள், ஆவணங்கள் சிங்கள மொழியில் அனுப்பப்படுகின்றன. இவற்றை நான் திருப்பி யனுப்புவேன் எனக்கூறிவைக்க விரும்புகிறேன்.

## ஒரு பனிக்காலமும் நெருப்பாய் எரிகின்ற நினைவுகளும்

மின்விளக்கின் ஒளிகளில்
நிழல் தெறித்துக்கிடக்கும்
அன்னிய வீதிகளில்
மனுசனைத் தின்னும் பாடல்களே
நெருப்பாய் எரிகிறது

மனிதப் புதைகுழிகள்
எங்கெங்கே மூடிக் கிடக்கிறதென
யாருக்கும் தெரிவதில்லை
எல்லோருக்கும்
எல்லாமே தெரியும்

ஒருவருக்கொருவர்
பகைவராய்ப்போன பின்
வாழ்வினைத் தொலைத்த
வனாந்தரங்களின்
கற்பாறைகளின் தடக்கல்களில்
இனி எதைத் தேடிப்போவது

நிறையத்தூரம் கடந்தும்
மிகநீண்ட தொலைவிலேயே
காத்துக்கிடக்கிறோம்.

நண்பர்களின் கல்லறைகளில்
கொட்டிய பூக்கள்
என்றுமே காய்வதில்லை
பனிக்காலம் முழுவதும் கடந்து
மழைக்காலத்தில் நனைந்து
கோடையிலும் வாசம் வீசுகிறது
நினைவழியாத் தொலைவிடங்களின்
ஒவ்வொரு கல்லறைகளிலும்
வாழ்வதற்காய் மரித்த
நண்பர்களே....
நீண்டு விரிகிறது
உங்கள் முகங்கள்
சவுக்கந்தோப்புகளின்
புதைகுழிகளுக்குள்ளிருந்தும்.....

மூச்சடங்கிப் போகிற
இன்றைய ஒவ்வொரு ராவிலும்
இழப்பின் கோரங்களில்
வீரியமிக்க நாளைகளுக்காய்
இன்னும் எத்தனை காலம்
காத்துக்கிடப்பது

ஆற்றின் கரைகளில்
அள்ளுண்டு போன குச்சிகளாய்
கூளங்களாய்.....
எல்லாமே தொலைந்து போயிற்று....

புணர்தலில்
புசித்தலில்
வாழ்தலில்
எதிலுமே பிடிப்பற்று
இப்படித்தான் கழிகிறது
இன்றைய ஒவ்வொரு கணங்களும்.

\- பி.ரவிவர்மன்

உயிர் நிழலில் இருந்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

www.padippakam.com



புதிய
சமதர்மம்
Registered as a news paper in Sri Lanka

வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள்,
ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

## மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)

1935ல் ஆரம்பிக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சிதான் இந்த நாட்டின மிக பழைய இடதுசாரி கட்சியாகும். அக்கட்சியிலிருந்து இரண்டாவது உலக யுத்தத்தின் போது எழுந்த முரண்பாடு காரணமாக வெளியேற்றப்பட்டவர்களால் 1943ல் அமைக்கப்பட்டது தான் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாகும். ல.ச.ச.கவுக்குள் காலப்போக்கில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பிலிப் குணவர்த்தன தலைமையில் ஒரு பிரிவு விலகிச் சென்றுவிட்டது. பின்பு என்.எம்.தலைமையில் ஒரு பிரிவும், கொல்வின் மற்றும் லெஸ்லி தலைமையில் இன்னொரு பிரிவுமாக பிளவுபட்டு, பின்பு இவ்விருபிரிவினரும் மீண்டும் இணைந்து கொண்டனர். எவ்வாறாயினும் பிந்திய காலகட்டத்தில் ல.ச.ச.க. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டரசாங்க வலையில் வீழ்ந்த பின் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே நவசமசமாஜக் கட்சி 1977ல் உதயமாகியது. இன்று ல.ச.ச.க. ஸ்ரீ.ல.க.வுக்குள் கரைந்து விட்டதென்றே சொல்லுமளவுக்கு அதன் தனித்துவமும் இடதுசாரி இலட்சியமும் சிதைக்கப்பட்டுள்ளது.

மறுபுறுத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை எடுத்துக் கொண்டால், 1960 களில் ருசிய மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட பிளவினையடுத்து, மொஸ்கோ சார்பு மற்றும் பீக்கிங் சார்பு என்றழைக்கும் கட்சிகள் தோற்றம் பெற்றன. பீற்றர் கெனமன், எஸ்.ஏ. விக்ரமசிங்க தலைமையில் மொஸ்கோ சார்பு கட்சி இயங்கியது. சண்முகதாசன் தலைமையில் பீக்கிங் சார்பு கட்சி இயங்கியது.

பீகிங் சார்பு கட்சியிலிருந்து பிரிந்து சென்ற தலைமையில் அமைக்கப்பட்டதுதான் ஜே.வி.பி. ஆகும். அதேபோல் மறுபுறத்தில், அதே கட்சியிலிருந்து பிரிந்து சென்று கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) எனும் பெயரில் செயற்பட்டு இன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதுதான் புதிய ஜனநாயகக் கட்சியாகும்.

பிரதானமாக தென்னிலங்கை கிராமிய இளைஞர்களைக் கொண்டு அமைக்கப்பட்டதான ஜே.வி.பி.யின் வர்க்க குணாம்சம் தான் என்ன? அதனை ஒரு இனவாத கட்சியென, கொலைகார கட்சியென வெவ்வேறு வகையில் ஒருபுறத்தில் தமிழ் பேசும் மக்களும் மறுபுறத்தில் தென்னிலங்கை வலதுசாரி சக்திகளும் இனம் காணத்தலைப்படுவதை நாம் அறிவோம். ஜே.வி.பி.யில் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை நிச்சயமாக விமர்சிக்கப்பட வேண்டிய குறைபாடுகள் இருந்து வந்துள்ளன என்பது உண்மை. அதில் பேரினவாத சக்திகள் கூட ஒருகாலத்தில் குடிகொண்டிருந்தது உண்மை. இன்று சிங்கள வீரவிதானவின் முக்கியஸ்தராகிய சம்பிக்க ரணவக்க ஜே.வி.பியிலிருந்து வெளியேறியவர். அதே போல வேறு பிற்போக்குவாத சக்திகளும் ஜே.வி.பியிலிருந்து வெளியேறியுள்ளனர். ஏன், இன்று வீரவிதானாவுக்கு பக்க பலமாக விளங்கும் (பேராசிரியர்) நளின் டி சில்வா ஒரு காலத்தில் ந.ச.ச.க.வின் முக்கியஸ்தர்களில் ஒருவராக விளங்கியவர். தனிநபர்களும், குழுக்களும் சிதைந்து போவதும், திசைமாறிச் செல்வதும் ஒன்றும் புதியவிடயமல்ல.

இன்றைய ஜே.வி.பியை எடுத்துக் கொண்டால் அது குறிப்பாக தேசிய இனப்பிரச்சினையில் ந.ச.ச.க.வுக்கு 'ஒத்தநிலைப்பாட்டினைக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையே. அதாவது, அக்கட்சியானது மார்க்ஸிச - லெனினிச அடிப்படையிலான சிறுபான்மையினங்களின் சுயநிர்ணய உரிமை எனும் கோட்பாட்டினை தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் எல்லா இனங்களுக்கும் மக்களுக்கும் சமத்துவம் எந்தவொரு மொழி அல்லது மதத்திற்கு விசேட அந்தஸ்து இருக்கக்கூடாது என்ற முற்போக்கு நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதை யாரும் மறந்து விடக்கூடாது. குறிப்பாக ஐ.தே.க.வுக்கு அல்லது பொதுஜன முன்னணிக்கு ஆதரவு வழங்க சித்தமாயிருக்கும் தமிழ் பேசும் மக்கள் பழைமையிலிருந்து ஜே.வி.பியை இனவாத கட்சி என மேலெழுந்தவாரியாக முத்திரை குத்துவது தவறு. சமகால யதார்த்தங்கள் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். யுத்தம் கொடியது. அது இனப் பிரச்சினைக்கு தீர்வல்ல அது நிறுத்தப்பட வேண்டும் என ஜே.வி.பி. நவசமசமாஜக் கட்சியுடன் இணைந்து வீதியிலிறங்கி போராடியுள்ளது.

ஐ.தே.கவோ பொது ஜன முன்னணியோ தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கோ ஏழை எளிய மக்களுக்கு பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தவோ வக்கற்றவை என்பது வெள்ளிடைமலை. அவ்விரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் தான் அமைத்தாலும்; அது தொழிலாளி வர்க்கத்தையும் தமிழ் பேசும் மக்களையும் அடக்கியொடுக்கியும் அழித்தொழித்தும் விடுவதற்குத்தான் செயற்படும்.

எனவே தான் சிங்கள பேரினவாதத்தின் வளர்ச்சியை முறியடிக்க வேண்டுமாயின், ஒரு மூன்றாவது இடதுசாரி சக்தி கட்டியெழுப்பப்படுவது அத்தியாவசியமாகும். அதற்கு ஜே.வி.பியின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

## பொலிசார் புலிகளுக்குப் பின்முதுகு... மக்களுக்கு அடிதடி...

இன்று நாட்டில் நிலவும் இந்தக் கொடிய யுத்தம் மக்களை எந்த அளவு வேதனைக்கும், விரக்திக்கும் தள்ளியுள்ளது என்பதை ஜனாதிபதியோ அரசியல்வாதிகளோ எண்ணிப் பார்ப்பதாக இல்லை. இன்று வடக்கில் போர் நிகழும் பிரதேசங்களில் புலிகளின் கையே ஓங்கி இருக்கின்றது. இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாது திண்டாடுகிறார்கள் என்பதாகவும் போர் முனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிழக்கிலுள்ள பெரும்பாலான இராணுவத்தினர் வடக்குக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கிழக்கில் சில பிராந்தியங்களில் இராணுவத்தினரின் ஆதிக்கம் குறைவடைந்திருந்த போதும் பொலிஸாரின் கெடுபிடிகள் அங்கே நிலவுவதாகக் கூறப்படுகிறது. புலிகளின் நடமாட்டத்தையறிந்தாலே போதும் இருந்த இடத்தையே காலி செய்யும் பொலிஸார் தமது வீரத்தையும், செல்வாக்கையும் அப்பாவித் தமிழ் - முஸ்லிம் மக்களிடம் காட்டி வருகின்றனர். முஸ்லிம் மக்களும் கிழக்கில் தமிழர்கள் என்ற நிலைக்கே தள்ளப்படுகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பிரதேசத்திற்குள் உள்ளடக்கமான சில கிராமங்களிலிருந்த மக்கள் 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது தமது கிராமங்களை விட்டு வெளியேறி இருந்தனர். தற்போது இந்தக் கிராமங்களில் மக்கள் குடியேறி வருகின்றனர். இவர்களுக்கு சில தனியார் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே சில உதவிகள் கிடைத்தன. பின்னர் பிரதியமைச்சர் M.L.A.M. ஹிஸ்புல்லாஹ் அவர்களினால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 10,000/= கொடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இக்கிராமங்களில் பொது வாகதியாவட்டவான், பாலைக்காடு (தற்போது இதன் பெயர் பாலை நகர்) ஹிஜ்ரா நகர் போன்றவை குறிப்பிடக்கூடியவை. இந்த இடங்களில் இராணுவத்தினரின் முகாம்களும் காணப்பட்டதால் மக்களும் பயமின்றிக் குடியேறினர். இதில் பாலைக்காடு, ஹிஜ்ரா நகர் போன்ற கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை. இராணுவத்தினரையே நம்பி வாழும் இம்மக்கள் மீது இராணுவத்தினர் இப்போது ''சேஸ்ட்டைகள்'' புரிய ஆரம்பித்துள்ளனர். முஸ்லிம் - தமிழ் பெண்களின் மீது பாலியல் வல்லுறவு புரிவதும், ஆண்களை தினமும் காடு வெட்டும்படி பணிப்பதுமாக அவர்களின் கெடுபிடிகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. மேலும் இந்த இடங்களில் தற்போது பள்ளிக்கூடங்கள் 5ம் ஆண்டு வரையுமே இயங்கி வருகின்றன. அதற்கு மேற்பட்ட வகுப்புப் படிக்கும் மாணவர்கள் இந்தக் கிராமங்களுக்கு அண்மையிலுள்ள ஊர்களுக்குத்தான் செல்ல வேண்டும். அவ்வாறு இந்தக் கிராமங்களிலிருந்து செல்லும் மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். பொதுவாக இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் சைக்கிளில் போகின்றவர்கள் இறங்கிப் போக வேண்டுமென்ற சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அவ்வாறு இறங்காமல் போகின்றவர்கள் சைக்கிளைத் தூக்கி தோள்களில் சுமக்கும்படி பணிக்கப்படுகின்றனர். எந்தவொரு முக்கிய வேலைக்காகப் போகின்ற போதும் அவர்களுக்கு இறங்கியே போகவேண்டுமென்ற நிலைமை அங்கே நிலவுகின்றது. மாணவர்கள் கூட இறங்கிப் போவதற்காகப் பணிக்கப்படுகின்றனர். இக்கிராமங்களிலிருந்து ஏற்கனவே குறிப்பிட்டது போல பாடசாலைக்குப் போவதெனின் 2,3 கட்டைகள் கடக்க வேண்டி இருக்கும். அதனையும் பொருட்படுத்தாது அவர்களும் இறங்கிப் போக வேண்டுமென்று துரதிஷ்ட நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதுபற்றி எவரிடமும் முறையிட முடியாதுள்ளது. ''தாங்கள் என்ன செய்தாலும் யாரும் தட்டிக் கேட்க முடியாது'' என்ற திமிருடன் மக்களைப் பயமுறுத்தி வருகிறார்கள். இவர்களையே நம்பி குடியேறிய மக்களுக்கு இவர்கள் கொடுக்கும் மரியாதையும் பாதுகாப்பும் எப்படி இருக்கிறது? ஆனால் இம்மக்கள் அவர்களது பாதுகாப்பை நாடவில்லை. தங்களிடம் மானசீகமாய் நடந்து கொள்ளும்படிதான் வேண்டுகிறார்கள். அவர்களையே அவர்களால் பாதுகாத்துக் கொள்ள முடியாமல் இருக்கும் போது பிறகு எப்படி மற்றவங்களைக் காப்பாற்ற முடியும்?

## இறைவனின் இருப்பிடமும் சோதனைக்குள்ளானது

இலங்கை அரசின் அதி உயர் பீடத்தில் இருக்கும் ஒருவரின் மகள், மணமகளின் தோழியாக இருந்தமையால், கத்தோலிக்க தேவலாயம், ஒன்று கடும் சோதனைக்குள்ளானது. நூற்றுக்கும் மேற்பட்ட ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டனர். பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய லூசியன் டெப், இதுபற்றிக் கூறுகையில், ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர், திருமண நாளுக்கு முதல் நாள், தேவாலயத்துக்குள் வந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததாகவும், தேவாலயத்தின் சகல பகுதிகளும் சோதனையிடப்பட்டதாகும். பங்குத் தந்தையின் வீடு, குசினி உட்பட அலுமாரிகள் கூட திறக்கப்பட்டு சோதனை செய்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இத்தேவாலயம் பம்பலப்பிட்டி சென்மேரிஸ் தேவாலயம் என்று கூறப்படுகிறது

மேலும் அவர் கூறியிருப்பதாவது புனிதத்திற்குரிய பெட்டிகளை கூட சோதனையிட முயற்சித்ததாகவும், மதப் புனிதத்தை காரணம் காட்டி, எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் அம்முயற்சி கைவிடப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

தேவாலயத்தை சுற்றியிருந்த சகல வீதிகளும் அன்றைய தினம் மூடப்பட்டதுடன், திருமண வைபவத்திற்கு வருகை தந்தோரையும் பாதுகாப்பு பிரிவின் சோதனைக்குள்ளாக்கியுள்ளனர். சில பெண்களின் தலைமுடி கூட சோதனைக்கு உள்ளாகியுள்ளது. திருமணம் முடித்த பின்பு எண்ணற்ற தொலைபேசி அழைப்புகள் மூலம், பங்குத் தந்தையாருக்கு மக்கள் சோதனைக் கெடுபிடிகளுக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

பின்பு ஞாயிறு நடைபெற்ற பூசையில் அதி உயர் அரசியல்வாதிகள் இப்படியான வைபவங்களுக்கு தேவாலயத்துக்கு வராமல் இருப்பதே நல்லதென்றார் அங்ஙனம் செய்தால், தேவால யத்தின் புனிதத் தன்மை கெடா மல் இருப்பதுடன் மக்களும் தொல்லைகளுக்கு உள்ளாகாமல் இருப்பார்கள் என்றார். அருட் தந்தை மேலும் கருத்து தெரிவி திருப்பதாவது அரசியல் வாதிக தமது சுய நலனுக்காகவும் பெ மைக்காகவும், இந்த ஏ நாட்டை கொள்ளையடிக்கின்றா கள். இன்று தேவாலயத்துக்கு புகுந்து தமது பாதுகாப்பு நட டிக்கையை மேற்கொள்ள நிர் பந்திக்கிறார்கள்.

இறுதியாக அருட்தந்தை கூ கையில், இந்த பிரபலமான தேவ லயத்தில், திருமணத்தை நடத் நான் அனுமதி வழங்கியிரு தேன். ஆனால் அதிமுக்கியமா ஒருவர் இதில் சம்பந்தப்பட் இருப்பதையோ படையின முற்றுகையிடுவார்கள் என் தையோ நான் அறியவில்லை.

படிப்பகம்